தமிழர் பொருளியம் வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 82 03.11.2024

# பிரம்பு கைத்தொழில் குறைவடைந்து வருகிறதா?





யாழ்ப்பாணத்துக்கும் ஒரு ஆறு 08



ஊழலற்ற எதிர்காலத்தை உருவாக்குதல்: ஒரு கூட்டு முயற்சி 10



கறுத்த மீன்கள் கிழக்கு கரைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது ஏன்? 16

# பிரம்பு கைத்தொழில் குறைவடைந்து வருகிறதா?

**கல், உமி, இல்லாத அரிசி வந்ததால் சுளகுப் பாவனையும் இல்லாம போயிற்றுது. அதுமட்டுமா வெட்டுமெசின் வந்தபிறகு கைப்பெட்டி, மறைக்கால், பிரம்புக்கூடை எல்லாம் இல்லாமப்போச்சி இருந்தாலும் இப்பவும் பிரம்பால செய்யிற சாமான்களத் தேடி வாங்கிற்றுப் போறாக்களும் இருக்காங்க. நம்மட நாட்டுக்குவாற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் விரும்பிவாங்குறாங்க.**

சயன் Battinews



பிரம்பு வெட்டி வாறத்துக்கு எங்கள விடுறாங்கல்ல. ஏதோ சட்டவிரேதமான தொழில் செய்யிறதப்போல பிடிச்சு தண்டப்பணம் அறவிடுறாங்க. இப்ப பிரம்பு வெட்ட புதினமா பேமிட் கேட்காங்க. வெட்டுறத்துக்கு ஒரு பேமிட், கொண்டுவாறத்துக்கு ஒரு பேமிட் எடுக்கோணும்.

எங்களப்போல பிரம்புத்தொழிலில் செய்யிறாக்கள் பற்றி யாராவது சிந்திக்காங்கலா? எனக்கு 12 வயசில இருந்து பிரம்பிளைச்சித்தான் குடும்பத்தக் கரையேற்றிவாறன். 18 வருசமா கொழும்பு பத்தரமுல்லைக்கு பிரம்புச்சாமான் கொடுத்து வாறன். 22 வருசமா தேசிய அருங்கலைகள் பேரவையால நடத்திற தேசிய கைவினை உற்பத்திகளுக்கான தேசிய விருதைப் பெற்றுவாறன்.

பிரம்புக் கைத் தொழில ஊக்குவிக்க அரசாங்கமும் உதவுதில்ல. அரசியல் வாதிகளும் உதவுறாங்கல்ல.' என்றார் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த க. மார்க்கண்டு என்பவர்.

பாரம்பரிய குடிசைக் கைத் தொழிலான பிரம்புக் கைத் தொழில் இந் நாட்டில் ஊக்குவிக்கப்படாது அது அருகிவரும் நிலைக்குச் சென்றுள்ளது. பிரம்பினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு இன்று கூட மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கின்ற நிலையில் இத் தொழிலில் ஈடுபடுபவர்களை தட்டிக்கொடுத்து அதிலுள்ள தடைகளை களைவதற்கு எவரும் நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை. மாறாக பிரம்பு வெட்டினால் அதற்கு தண்டப்பணம் அறவிடப்பட்டு வருகின்றதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண் முனைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ளது புதுக்குடியிருப்புக் கிராமம்.



இக் கிராமம் ஒரு காலத்தில் பிரம்புக் கைத் தொழிலிலுக்குப் பேர் போன கிராமமாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் பிரம்பினாலான பொருட்களுக்கு நாட்டின் நாலாபாகங்களிலும் நல்ல கிராக்கியுள்ளது. அழகும்,நேர்த்தியும் நிறைந்த பிரம்பு பொருட்களை இங்குள்ள மக்கள் செய்வதில் கெட்டிக்காரர்கள். விஸ்ணு பிரம்புச் சங்கம் என ஒரு சங்கம் வைத்து இச்சங்கம் ஊடாக பிரம்பு கைத்தொழிலாளர்களின் நலன் பேணப்பட்டும் வந்துள்ளது.

இன்று பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளதால் இயற்கையான மூலப்பொருளைக்கொண்டு தயாரிக்கப்படும். கை வினைப் பொருளான பிரம்பினால் ஆன உற்பத்திப் பொருட்களை எவரும் எண்ணிப்பார்ப்பதில்லை. 'வெந்ததைத்தின்று விதிவந்தால் சாவோம்' என்ற போக்கிலே பலர் நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

அதனால் அற்ப ஆயுளுடன் தமது வாழ்நாளையும் முடித்துக்கொள்கின்றனர். நாளுக்கு நாள் புதுவித நோய்களின் தாக்கத்தில் உழன்று சாவுக்கும், வாழ்வுக்கும் இடையில் போராடிக்கொண்டிருக்கின்றனர். இயற்கை சார்ந்த வாழ்க்கைக்கு விரும்பியோ விரும்பாமலோ நாம் மாறவேண்டும். அதற்கு அரசாங்கமும் உதவவேண்டும்.

குடிசைக் கைத்தொழிலாக விளங்கிய பிரம்புக் கைத்தொழில் இன்று அழிவடையும் நிலைக்குச் சென்றுள்ளது.

'கல், உமி, இல்லாத அரிசி வந்ததால் சுளகுப் பாவனையும் இல்லாம போயிற்றுது. அதுமட்டுமா வெட்டுமெசின் வந்தபிறகு கைப்பெட்டி, மறைக்கால், பிரம்புக்கூடை எல்லாம் இல்லாமப்போச்சி இருந்தாலும்



இப்பவும்பிரம்பால செய்யிற சாமான்களத்தேடி வாங்கிற்றுப் போறாக்களும் இருக்காங்க. நம்மட நாட்டுக்குவாற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் விரும்பிவாங்குறாங்க. எங்களுக்கு ஊக்குவிப்பு தாறத்துக்குத்தான் ஒருவருமில்ல.' என்றார் சுவேந்திரன் என்பவர்.



பிரம்பு உற்பத்திப் பொருட்கள் இயற்கையானது, நச்சுத்தன்மையில்லாதது, மழை, வெயில் எதுவென்றாலும் புழுதடையாது, கீழே விழுந்தாலும் உடையக்கூடியதல்ல, பத்து, பதினைந்து வருடங்கள் நீண்ட காலத்திற்கு பாவிக்கக் கூடியது. விலையும் குறைவானது. அது மட்டுமல்ல பிரம்பு பெட்டி, சுளகு, மரைக்கால் என்பன வீட்டில் இருந்தால் அதில் லட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்ற மத நம்பிக்கையும் இருந்தது. இவையெல்லாம் இப்போது அருகிவருவது வேதனையளிக்கின்றது. பிரம்பு கிழங்கும் அதன் வேரும் மருத்துவத்திற்கு பயன்படுகின்றது. பிரம்பு பழத்தில் விற்றமின் 'சீ' சத்தும் உள்ளது. இப்படிப்பட்ட பிரம்புக் கைத்தொழிலை வளர்த்தெடுக்க அரசு பாராமுகமாக இருப்பது ஏன்?

பிரம்புக் காட்டினை அரசு காடழிப்பு திட்டத்தில் உள்ளடக்கியுள்ளது. இதனாலே பிரம்பினை வெட்டமுடியாத துர்ப்பாக்கிய நியைில் உற்பத்தியாளர்களுள்ளனர். பிரம்புக் காடு என்பது வெட்ட வெட்டவே அதன் வளர்ச்சி வேகமாக வளரும். முன்னர் இருந்த பிரம்புக் காடுகள் வீட்டுத்திட்டம், விவசாயப்பண்ணைகள் அமைப்பதற்காக திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரம்பு பன்னை பெறுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கொடுவாமடு, மாவடிவேம்பு, உறுகாமம், கரடியனாறு போன்ற பகுதிகளில் இருந்தே பிரம்பு உற்பத்திக்கான மூலப்பொருளைப் பெற்று வருகின்றனர். தற்போது இங்கிருந்தும் பிரம்பினை பெறமுடியாதுள்ளனர். பிரதேச செயலகங்கள் அனுமதிப்பத்திரங்களை கொடுப்பதில் பின்னடிக்கின்றன.

அரசினால் பன், பனை, தும்பு, களிமண் போன்றவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பிரம்பினை மட்டும் அதற்குள் உள்ளடக்கவில்லை. இதனாலே அதனைப் பெறமுடியவில்லை.

பிரம்பினால்ஆன உற்பத்திப்பொருட்களை செய்பவர்கள் மனதில் சந்தோசம் நிறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.

**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0777304010 / 0702675575

# தேர்தல் அரசியல்

பொதுத் தேர்தலுக்கு இன்னும் சில தினங்கள் மட்டுமே உள்ள நிலையில், கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களின் பரப்புரைகள் அடுத்த வாரத்துடன் முடிவுக்கு வரப்போகின்றது. அனைத்துக் கட்சிகளும் தமது பரப்புரைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றன. தமிழ்ப் பகுதிகளில் வழமையைவிட அதிகமாக சுயேச்சைக் குழுக்கள் இம்முறை களமிறக்கப்பட்டுள்ளன. இவை உண்மையில் சுயேச்சைகளா அல்லது யாராவது தமது தேவைகளுக்காக களம் இறக்கப்பட்டவர்களா என்ற கேள்வியும் தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

அதிகளவு கட்சிகள், அதிகளவுக்கு சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கியிருப்பதால் மக்கள் மத்தியில் குழப்பங்களும் அதிகரித்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஆறு ஆசனங்களுக்காக 396 பேர் களமிறங்கியிருக்கின்றார்கள். வாக்காளர் தொகையும் ஆசனங்களின் தொகையும் குறைந்திருக்கின்றது. வேட்பாளர்களின் தொகை மட்டும் அதிகரித்திருக்கின்றது. இதனால் குழப்பங்களும் அதிகரித்துள்ளது. யாருக்கு வாக்களிப்பது என்பதில் மக்களுக்கும் குழப்பம்.

அதிகளவு வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தாலும் தாம் எதற்காகப் போட்டியிடுகின்றோம் என்பதில் அவர்களில் பலருக்குத் தெளிவில்லை. கட்சிகளில் இடம்கிடைக்காத பலர் சுயேச்சைகளாக களமிறங்கியிருக்கின்றார்கள். தனியாகத் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால், இன்னும் சிலரையும் இணைத்து குழு ஒன்றை அமைப்பது அவர்களுக்குத் தவிர்க்க முடியாததாகிவிட்டது. அவ்வாறு இணைக்கப்பட்டவர்கள் பலருக்கும் தாம் போட்டியிடுவதற்கான காரணம் தெரியாது. “அண்ணை அழைத்தார்! நாங்கள் இறங்கிட்டம்” என்பதுதான் அவர்களுடைய நிலை! அதற்கு மேல் அவர்களிடம் எதுவும் கேட்கமுடியாது!!

களத்தில் இறங்கியிருக்கும் கட்சிகளில் ஒரு சில கட்சிகள் மட்டும்தான் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன. பெரும்பாலான கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் தமது நோக்கங்கள் குறித்து மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் எந்தவொரு அறிக்கையையும் வெளியிடவில்லை. கட்சிகளில் இடம் கிடைக்காமல் சுயேச்சைகளாக களமிறங்கியிருப்பவர்களுக்கு கொள்கைகள் என்று எதுவும் இருக்கப்போவதில்லை என்பது உண்மைதான்.


தேர்தல் பரப்புரைகளில் முக்கிய இடத்தைப் பெற வேண்டிய விடயம் பொருளாதாரம்தான். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடிதான் தற்போதைய ஆட்சி மாற்றத்துக்கும் வழிவகுத்தது. அத்துடன், ஒரு மாற்றம் தேவை என்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்தியதும் அதுதான். ஆனால், பொருளாரம் குறித்தோ, மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான தமது திட்டங்கள் குறித்தோ பிரதான கட்சிகள் கூட தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை.

மக்களைப் பொறுத்தவரையில், இது முக்கியமான ஒரு தேர்தல். அடுத்த ஐந்து வருடங்களுக்கு யார் ஆட்சியில் இருக்க வேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக யார் நாடாளுமன்றம் சென்றால் எமது உரிமைகளையும், அடிப்படையான தேவைகளையும் பெற்றுக்கொடுப்பதற்காக அர்ப்பணப்புடன் செயற்படுவார்கள் என்பதை பரிசீலித்து தமது வாக்கைப் பயன்படுத்த வேண்டும்!

# பணம் குறித்த பார்க்கின்சன் விதி

இ.சிங்காரம

பார்கின்சன் விதியைப் (PARKINSON LAW OF MONEY) பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?




“அதிகரிக்கும் வருமானத்துக்கு ஏற்ப, ஒருவரது செலவுகளும் தொடர்ந்து அதிகரிக்கும்” என்கிறார், பார்கின்சன். இன்னும் சொல்லப்போனால், “ஒருவர் எவ்வளவு பணம் சம்பாதிக் கிறாரோ அதைவிட சற்று ‘திகமாகவே அவர் செலவழிப்பார்” என்கிறார் அவர். உளவியல் ரீதியாக பார்க்கையில், இது சராசரி மனிதர்களின் மனோபாவம். இதைக் கடப்பவர்களே பணக்காரர்கள் ஆகிறார்கள். சரி.. இதைப் பணக்காரர்களால் மட்டும் எப்படிக் கடக்க முடிகிறது? இதோ.. அவர்கள் பின்பற்றும் ஐந்து உத்திகள்..

“வருமானம் அதிகரிக்கும்போது வருமானத்தில், 50% மட்டுமே தன்னுடைய பணம் என எண்ணி பணக்காரர்கள் செலவழிக்கிறார்கள். மீதமுள்ள 50% பணத்தை, அது தன்னுடைய பணம் அல்ல என்ற சிந்தனையோடு அதை எதிர்காலத்துக்காக சேமிக்கிறார்கள்” என்கிறார், பிரையன் ட்ரேசி என்கிற தன்முனைப்பு எழுத்தாளர்.

வீட்டுக் கடன், வாகனக் கடன், கிரெடிட் கார்டு கடன் வாங்கும்போது, அவற்றை இ.எம்.ஐ. முறையில் திருப்பிச் செலுத்துகிறோம். இதுபோல சேமிப்பைத் தொடர்வதற்கும் ஒரு முறை உள்ளது. பணக்காரர்கள் வங்கிகளுக்கு சேமிப்புக்கும், ஸ்டாண்டிங் இன்ஸ்டிரக்‌ஷன் (Standing Instruction) கொடுத்து விடுகிறார்கள். தானாகவே சேமிப்புக்கு சென்றுவிடும். இதனால் ஒவ்வொரு மாதமும், சேமிக்கலாமா, வேண்டாமா என்று சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது.

பணக்காரர்கள் எந்தப் பொருளை வாங்கும் போதும் பேரம் பேசத் தவறுவதில்லை. பேரம் பேசுவதால் தங்கள் மதிப்பு குறைந்துவிடும் என்று எண்ணுவதும் இல்லை. மேலும் அதிக விலை உள்ள பொருள் வாங்குவதையும் அவர்கள் கவிர்க்கவே விரும்பகிறார்கள்.

துணிகள் முதல் வாகனங்கள் வரை எல்லாப் பொருள்களிலும் மிகக் குறைந்த விலை, நடுத்தர விலை, சற்று உயர்வான விலை, மிக அதிக விலை என்ற நான்கு வகையான விலைகள் உள்ளன. பணக்காரர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது விலையில் உள்ள பொருள்களை மட்டுமே வாங்குகிறார்கள்.

மேலும் தேவையற்ற பொருட்களை அவர்கள் வாங்குவதில்லை.

தவணை முறை என்கிற சித்தாந்தம் வந்தாலும் வந்தது.. செல்போன், டி.வி.யில் தொடங்கி, ரிசார்ட், வாகனம், வீடு என அனைத்தையும் தவணை முறையில் வாங்கும் பழக்கம் நம்மிடம் வந்துவிட்டது. வருமானம் தரக்கூடிய அல்லது செலவைக் குறைக்கக்கூடிய எந்தப் பொருளையும் தவணை முறையில் வாங்குவதில் தவறில்லை. ஏனென்றால் அவற்றின் மூலம் கிடைக்கிற கூடுதல் தொகையை வைத்து நாம் வட்டியைக் கட்டி, கடனை அடைத்து விடலாம். ஆனால் வருமானம் தராத எந்த பொருளையும் நாம் கடனில் வாங்குவது என்பது நமக்கான கூடுதல் செலவையே ஏற்படுத்தும்.

பணக்காரர்கள், ஏழைகளைப் போல வாழ்கிறார்கள். ஆனால் பணக்காரர்களைப் போல சேமிக்கிறார்கள். குறைவாகப் பணம் சம்பாதிப்பதில் தவறில்லை. ஆனால் அதிகம் செலவழிக்கக் கூடாது என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே, ஆரம்ப காலத்தில் ஏழைகளைப் போல குறைந்த தேவைகளுடன் வாழப் பழகிக்கொண்டால் ஓய்வுக்குப் பிறகு, யார் கையையும் எதிர்பார்க்காமல் பணக்காரர்களைப் போல் ‘ஜம்’மென்று வாழலாம் என்பதே அவர்களது நோக்கம். பார்கின்சன் விதி சொல்வதும் இதைத்தான்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,09,800 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,28,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



**கேள்வி -** வடக்கு கிழக்கில் உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள பலர் சந்தைப்படுத்தலில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றார்கள். இதனை எவ்வாறு கையாள்வது?

**சந்திரகலா மோகன்**
**மட்டக்களப்பு**

**பதில் -** அமெரிக்க மார்க்கெட்டிங் ஜாம்பவானான ரெஜிஸ் மெக்கென்னா (Regis McKenna), 1990-களில் இணையம் அறிமுகமாகிக் கொண்டிருந்த காலகட்டத்தில் சந்தைப்படுத்தல் குறித்து கூறிய பிரபலமான கூற்று இது. தற்போதைய சமூக ஊடக காலகட்டத்தில் சந்தைப்படுத்தல் பற்றி சொல்லத் தேவையில்லை. உலகின் ஒவ்வொரு அசைவிலும் சந்தைப்படுத்தல் நிறைந்த காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தற்போதைய சூழலில் உங்களை நீங்கள் சரியாக சந்தைப்படுத்தல் செய்வதன் மூலமே அடுத்த கட்டத்துக்கு செல்ல முடியும். அந்தவகையில், ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டிய திறனாக மார்க்கெட்டிங் மாறியுள்ளது என்கிறார் இந்தியாவைச் சேர்ந்த நிபுணர்களில் ஒருவரான சாய்ராம் கிருஷ்ணன்.

2011-ம் ஆண்டு ஃப்ரெஷ்வொர்க்ஸ் (freshworks) நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் பிரிவில் தன் பணியைத் தொடங்கியவர் சாய்ராம் கிருஷ்ணன். உத்திகளுக்கு பெயர்போன விங்கிபை (wingify) உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அவர், தற்போது பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் அட்டாமிக்வொர்க் ஸ்டார்ட் அப்பின் மார்க்கெட்டிங் பிரிவின் தலைவராக உள்ளார்.

அடிப்படையான கேள்வி, மார்க்கெட்டிங் என்றால் என்ன? – உங்கள் தயாரிப்பைப் பற்றிய கதையை சொல்வதுதான் மார்க்கெட்டிங். அந்தத்தயாரிப்பை ஏன் உருவாக்கி இருக்கிறீர்கள், அதைப் பயன்படுத்துவதால் வாடிக்கையாளர்களுக்கு என்ன கிடைக்கும், சந்தையில் பயன்பாட்டில் உள்ள மற்றவற்றிலிருந்து உங்கள் தயாரிப்பு எந்த வகையில் தனித்து இருக்கிறது. இந்த விஷயங்களை முன்வைப்பதுதான் மார்க்கெட்டிங்கின் அடிப்படை.

இன்று நீங்கள் ஆப்பிள் ஐபோன் வாங்குகிறீர்கள். அதன் தரம், அதைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுபவம் எல்லாவற்றையும் தாண்டி, ஆப்பிள் பற்றிய கதை மூலமே அதைப்பற்றி உங்களுக்குத் தெரிய வந்திருக்கும். சொல்லப் போனால், மார்க்கெட்டிங் வழியாகத்தான் உங்கள் தயாரிப்புக்கு நீங்கள் அர்த்தம் வழங்குகிறீர்கள்.

மார்க்கெட்டிங் செயல்பாட்டில் மூன்று விஷயங்கள் மிக அடிப்படையானவை. சந்தை ஆய்வு. மார்க்கெட்டிங் இன்சைட்ஸ், பொசிஷனிங். நீங்கள் பற்பசை தயாரிக்கிறீர்கள். அதைச் சந்தைப்படுத்த வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். இப்போது நீங்கள் முதலில் செய்ய வேண்டியது, தற்போது சந்தையில் என்னென்ன பற்பசைகள் விற்பனையில் இருக்கின்றன.

**உங்கள் கேள்விகளை**

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
வாட்ஸ் அப் முகவரி +94 777 304010




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

**அண்டைக்கு சுதந்திர தினம் எண்டதால இண்டைக்கெண்டான்ன என்ரை சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேணும் எண்டு போட்டு ...**

இந்த வரியம் சுதந்திர தினம் அண்டைக்கு வீட்டம்மாவோட கடும் கொழுவல் வந்திட்டுது. அண்டைக்கு சுதந்திர தினம் எண்டதால இண்டைக்கெண்டான்ன என்ரை சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேணும் எண்டு போட்டு வழக்கம்போல வாயை மூடிக்கொண்டு இருக்காம வாயைத்திறந்து ஆனா சத்தம் வெளியில வராம நல்லாச் சண்டை போட்டனான்.

வேறை ஒண்டுமில்லை அண்டைக்கு எங்கட சொந்தக்காறப் பிள்ளையொண்டு படலையுக்கை வந்து நிண்டுகொண்டு ஏனெண்டா கலியாணம் கட்டின புதிசில எங்கட மாமி ஒருத்தி என்னையும் வீட்டம்மாவையும் பாக்க பனங்காயும் பயறும்மாதிரி இருக்கெண்டு பகிடிவிட்டவ.

அதை நினைச்சுத்தான் வீட்டம்மா என்னைக் கன்றி புறூட் எண்டாவோ எண்டு எண்ணுறன்.

பேந்தும் அவ வீட்டம்மா கத்திறமாதிரிக் கத்தட்டும் நான் என்ரை வேலையை வழக்கம்போல பாப்பம் எண்டு போட்டு போய் அந்தப்பிள்ளையை வாம்மா எண்டன்.

எங்கட ஆச்சி ஆம்பிளை கத்தினா பொம்பிளை வாயை மூடிக்கொண்டு இருக்க வேணும் பொம்பிளை கத்தினா ஆம்பிளை வாயை மூடிக் கொண்டு இருக்க வேணும் .அப்பதான் சண்டை வீட்டிலை பெரிசா வராது எண்டுவா .

பிள்ளை கை நிறைய இனிப்போட தனக்குப் பிறந்தநாள் எண்டவும் நான் பிள்ளையைக் கூட்டியந்து பிள்ளைக்கு இண்டைக்கு பிறந்தநாளாம் எண்டு வீட்டம்மாட்டச் சொல்ல அவ டோன்ற்..சே.. பிறந்தநாள் ..சே..இற்..பேத்டே..எண்டா.

நீங்கள் இப்பிடிச் சொன்னா எங்கட கிளப்பில இருக்கிற மற்ற லேடீஸ் அறிஞ்சா வற்..எ சேம்...என்ரை மானம் மரியாதை எல்லாம் கிளப்பில வைச்சு கிளப்பிப்போடுவினம் எண்டா.

நான் பேந்து பிள்ளையிட்டை இண்டைக்கு எத்தினை யாவது பிறந்தநாள் எண்டு கேக்க பிள்ளை பதின்மூண்டு எண்டிச்சு. உடன வீட்டம்மா.ஓ..ஷிற்...ஐ.. ஹேற் திஸ் பதின்மூண்டு. வற்..இஸ்.. தேர்...இன்..தற் பதின்மூண்டு. எனக்கு கொஞ்சம் கூடப்பிடிக்கேல்லை எண்டா. நான் உடன ஏன் பிள்ளை நல்ல மூக்கும் முழியுமாத்தானே இருக்கிறாள் . வளர வளர இன்னும் வடிவா வருவாள்தானே . தேற்றீன்...பேந்து தேற்றீன் பிளஸ் எண்டு கூடிக்கொண்டு போகுமில்லே. அந்தப் பிள்ளையை உந்தப்பதின்மூண்டு வரையும் வளக்க தாய்தேப்பன் அண்ணன் தம்பி அக்கா தங்கச்சி மாமன் மாமி மச்சான் மச்சாள் எண்டு எத்தினை பேர் பாடுபட்டவை தெரியுமே எண்ணவும்..

ஸ்ரொப்..திஸ்..நோன்சன்ஸ்...வற்..ஐ.. செட்..இஸ்..செட்..எண்டா.

அங்கை பாருங்கோ பின்னல் வளந்தது பத்தாது கன்னத்தில மச்சம் கிடக்கு பேந்து ஹவ்..டேர்..யூ..ரு..டெல்..மீதற்ஷி..இஸ்.. பிறிற்றி. உடன எனக்கு கோவம் வந்து முதல்லை நீ உந்த போட்டிருக்கிற சைனீஸ் கூலிங்கிளாசைக் கழட்டிப்போட்டுப்பார். அது கன்னத்தில மச்சம் இல்லை தாய் வைச்ச பொட்டு எண்டன்.

நாங்கள் இப்பிடிப் பேச்சுப்பட பக்கத்து வீட்டு ஆள் வந்திட்டார். அவர் கொஞ்சம் வசதியான ஆள். ஆளணி அம்பு சேனை கனக்க. அவர் கிட்டத்தட்ட ஏரியாச் சண்டியன் மாதிரி. அவர் என்ன சத்தம். நான் ஒரு ஆள் இஞ்சை இருக்கிறது விளங்கேல்லையோ. தேவையில்லாத சோலி சுறட்டு எங்கட கோடியுக்க இருக்கப்படாது கண்டியளோ எண்டு கத்தவும் வீட்டம்மா..கப்சிப்.. ஆகி..பிள்ளையை வீட்டுக்கை மெல்லக் கூட்டியந்து போட்டா



மாமி...மாமி... எண்டு கூப்பிட வீட்டம்மா குழம்பியிட்டா. வற். நொன்சன்ஸ் மாமி...கோல்.. மீ..அன்ரி.. எண்டு சத்தம் போட்டா.

அவவுக்கு ஆரும் மாமி எண்டு கூப்பிட்டா வயது கூடினமாதிரி நினைப்பு வருமாம். அதால தன்னை அன்ரி எண்டுதான் கூப்பிடச்சொல்லுவா..

நான் மெல்லமா அவவிட்டை மாமி எண்டது இதயத்தில இருந்து வரும். அன்ரி எண்டது சொண்டில இருந்து வரும் எண்டதுந்தான் தாமதம் கன்றி புறூட்ஸ் எண்டா.

எனக்கெண்டா உவ பனங்காயைத்தான் கன்றி புறூட் எண்டிறாவோ அப்பிடி நினைச்சுத்தான் என்னைக் கன்றி புறூட் எண்டிறாவோ எண்டு ஒரே யோசினை.

தமிழர் பொருணம்மியம்
வாரமலர் TAMILS ECONOMY

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
03.11.2024

**பெரிதாக மலைகள் இல்லாது போனாலும் பெருமளவில் பாறைத் தொடர்களை கொண்டுள்ளது வவுனியா மாவட்டம். முல்லைத்தீவின் தெற்கிலும், குருந்தூர்மலை மண்கிண்டிமலை, கும்பகர்னன்மலை, ஒதியமலை என்பனவும் இது போன்ற கற்பாறைகளாகும்**

# யாழ்ப்பாணத்துக்கும் ஒரு ஆறு

## பார்வை 12



தமிழ்க்கவி



குளங்களின் தோற்றுவாய் ஆற்றுப் பாய்ச்சல்கள் ஆகும். ஆறுகளின் தோற்றுவாய் மலை முகடுகளாகும். அகில உலகமும் இதுதான் நடைமுறை. மனித நாகரீகம் வளர்ந்திருப்பதும் ஆற்றங்கரைகளில்தான் என அறிவோம். நைல் நதிப்பள்ளத்தாக்கும், சிந்துநதிக்கரையும் ஹரப்பா மொகஞ்சதாரோ எனவும் இந்த வரலாறுகளை நாம் படித்தறிந்த இடங்கள் இப்போது தொல்பொருளாய்வு தளங்களாகவும் சில இடங்கள் தேடுபொருளாகவும் உள்ளன.

இதில் நாங்கள் சளைத்தவர்கள் இல்லை. எமது பிரதேசங்களின் வளமும் நலமும் கூட இந்த ஆறுகளை அண்டியதாகவே இருக்கிறது. யாழ்ப்பாணம் முழுமைக்கும் பொதுவாக ஒரே ஆறு குறிப்பிடப்படுகிறது. 'வழுக்கியாறு' இதை வைத்து பல இலக்கியங்களும் படைக்கப்பட்டுள்ளன. செங்கை ஆழியானின் "நடந்தாய் வாழி வழுக்கியாறே" தான் எனக்கு முதன்முதலில் யாழ்ப்பாணத்திற்குள்ளும் ஒரு ஆறு இருப்பதை சொல்லித் தந்தது.

வன்னியில் அப்படியல்ல. நாம் பயணிக்கும் ஒவ்வொரு தெருவும் ஆறுகளின் தடங்களைக் கொண்டுள்ளது. சின்னச்சின்ன போக்குகளும் பென்னம்பெரிய பாலங்களும் இவற்றின் மீதான பயணங்களுக்கு உதவுகின்றன. வன்னியில் மிக நீண்டதாக பாயும் ஆறு கனகராயன் ஆறுதான். இது சேமமடுவில் மேல் வவுனியாவின் வடகிழக்கே அமைந்துள்ள பாறை முகட்டில் உற்பத்தியாகி சேமமடுக்குளத்தை அடுத்து மேல்பற்று தெற்கு, கருநாவல்பற்று என்பவற்றுக்கு ஊடாக, வடக்கு நோக்கி ஓடுகிறது. பல வனாங்களையும் நீர்த்தேக்கங்களையும் கண்டு பல மாதங்கள் ஓடி, ஆனையிறவுக்கு கிழக்கில் உள்ள ஏரியில் கலக்கிறது. இதன் நீளம் அண்ணளவாக ஐம்பத்தைந்து மைல்களாகும் அதாவது மகாவலியின் நீளத்தில் பாதி. மாரிகாலத்தில் இது பெருமளவு நீரை சுமந்து சென்று கடலில் சேர்க்கிறது.

கனகராயன் ஆறு பாயும் திசைக்கு கிழக்கே உள்ள சிறு ஆறு நெத்தலியாறாகும். இதுவும் பல சுழிமுகங்களுக்கு ஊடாக ஓடி யாழ்ப்பாணம் ஏரியில் கலக்கிறது. இதே வகையில் இந்த மாவட்டத்தில் ஓடும் இன்னுமொரு சிற்றாறு தேறாவில் ஆறாகும் தேறாவில் ஆறுடனான கொண்டுள்ளன என்கிற உண்மையை என் தந்தை சொல்ல கேட்டிருக்கிறேன். அதன்படி எனக்குத் தெரிந்த பாறை முகடுகளின் வேர்கள் வன்னி மண்ணெங்கும் நிறைந்து கிடக்கின்றன. இவற்றின் ஆதாரங்களாக அவை நிமிர்ந்து செல்லும் இடங்களில் இயற்கை அரண்களாக அவற்றை அமைத்து குளக்கட்டுகளை அமைத்துள்ளார்கள்.

சில பாதைத் தொடர்கள் பற்றி நாம் கண்ணால் பார்த்தவைதான் என்றாலும் அவைபற்றிய ஆய்வாளர்களின் முடிபுகள் ஆச்சரியம் தருபவை. மண்ணின் வளத்தை தேடி அந்த வரையறைகளை கண்டு அவற்றை ஆதாரமாக வைத்து திட்டங்களை தீட்டியவர்கள் பிரித்தானியர்களும் சிங்கள மன்னர்களும்தான் என்பது மறுக்கமுடியாத வரலாற்று உண்மையாக இருக்கிறது.

பெரிதாக மலைகள் இல்லாது போனாலும் பெருமளவில் பாறைத் தொடர்களை கொண்டுள்ளது வவுனியா மாவட்டம்.

பள்ளமாக உடையார்கட்டின் பாதை தென்படுகிறது. ஒவ்வொரு சிற்றாறுகளுக்கும் வளம் சேர்ப்பதான மலைத்தொடர்கள் வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களை நிறைத்துள்ளது.

மரங்கள் நிமிர்ந்து நிற்பதற்காக அதன் வேர்களை நிலத்தில் நான்கு புறமும் பரவி விட்டு தன்னை நிலைப்படுத்திக் கொள்கிறது. அது போலவே மலைத் தொடர்களை அண்டியதாக குன்றுகள், பாறை முகடுகளும் மலைகளும் நிலை



முல்லைத்தீவின் தெற்கிலும், குருந்தூர்மலை மணக்கிண்டிமலை, கும்பகர்னன்மலை, ஒதியமலை என்பனவும் இது போன்ற கற்பாறைகளாகும்.

துணுக்காயிலிருந்து கொக்குத் தொடுவாய்வரை இப்பிரதேசத்துக்கு குறுக்காக மலைத்தொடர் ஒன்று நீண்டு செல்கிறது. அதன் முடியும் இடம் 'புலிபாய்ந்தகல்லு' எனப்படும்.'

மடுக்கந்த தொடரை உருவாக்கும் பாறைகளை குன்றுகள் என்று கூறுவது பொருந்தும். அவை தோற்றத்திலிருந்தும் பாறைகளை விட வேறுபடுகின்றன. இக்குன்றுகள் வவுனியாக்குளத்துக்கு அக்கரையில் வடகிழக்கில் மனதைக் கவரும்வண்ணம் அழகான பின்னணியை கொடுக்கின்றன. வவுனயாவிற்கு சில மைல் தூரத்தில் பெரிய புளியங்குளத்திலிருந்து உயர்ந்தும் செங்குத்தானதுமான பாறைத் தொடர்கள் அல்லது முகடுகள் மடுக்கந்தை நோக்கி செல்கின்றன. இன்னொரு முகடு ஈறற்பெரிய குளத்துக்கு, பிரதான வீதிக்கு அண்மையில் ஒரு குன்றாக நிமிர்கிறது. இம் முகடானது ஈறற்பெரிய குளத்தின் அணையாக உயர்ந்து நிற்கிறது.

மேற்குபற்றில் ஒரு குளக்கட்டை ஒத்ததாக நீண்டு செல்லும் ஒரு சிறு மலைத்தொடரையும் நாம் பார்த்தாக வேண்டும். இது உள்நாட்டிற்கும் கரைதுறைப்பற்றிற்கும் இடையிலான எல்லையை உருவாக்குகிறது. வாவெட்டி மலை என, வன்னி நாட்டார்பாடல்களில் குறிப்பாக குருவிச்சிந்தில் குறிப்பிடப்படும் அந்த மலை இதுவாகும்.

வாவெட்டிமலையும், மண்மலையையும் கொண்டுஇருபதுமைல்வரைநீளமானதுமான இத்தொடர் கோரைமோட்டையில் முடிவடைகிறது.

மழைபெய்து வரும் நீர் நிலத்தில் ஓடி, உள்ளிழுத்து, அங்கிருந்து அதுவே ஒரு ஆறாகி கற்பார் இடையே பார் சிறக்கப் பாய்கிறது. அது நிலத்தடி நீராக கிணறுகள் வழியாக வெளிக் கொண்டுவரப்படுகிறது. வன்னியின் நீரூற்றுகள் பெரும்பாலும், கருங்கற் பாறை ஊற்றுகளாகும் எந்த வெப்பம்சொரியும்நாளிலும்கிணற்றிலிருந்து நீரை அள்ளி பருகினால் குளிர்பதனப் பெட்டியிலிருந்து எடுத்துப்பருகுவது போல அவ்வளவு சில்லென்றிருக்கும். சில இடங்களில் கிணற்றுக்கு நிலையம் பார்க்க வரும் அண்ணாவியார் அகக்கண்ணால் பார்த்தே சொல்வார்.

இத்தனை முழத்தில் பாறை வரும் அதை கழித்தால் எத்தனை முழத்தில் நீர் பெருகும்" என்பதையெல்லாம் அற்புதமாக கணித்து சொல்வார்கள். அக்காலத்தில் கிணற்றில் பாறை குறுக்கிட்டால் நான்கு பாறை உடைக்கும் வெடி வைத்தாவது அதை உடைத்து மேடேற்றிவிட்டு கிணற்றை ஆழப்படுத்துவார்கள். ஆம் வெடிமருத்து கெற்பு திரி டைனமெற் கரிமருந்து எல்லாம் கடைகளில் வாங்கலாம். அந்த பாறை ஒரு குறிப்பட்ட ஆழத்தின் பின் ஆழத்தில் வராது. பாறைத் தொடர் பெரிதெனக்கண்டால் கிணற்றை கைவிட்டுவிட்டு வேறிடத்தில் கிணற்றை வெட்டியவர்களும் உண்டு.

கருங்கற் பாறைகளின் பெறுமதி என்பது விபரிக்க முடியாது பெருகும். உடைத்து வெளியே போட்டால், கருங்கல் கண்டகல்லாகும்கட்டடங்களுக்கு அத்திபாரம். அதே கல் சிறுத்தால் சக்கைக்கல்' எனப்படும். பெருங்கற்களில் இடைவெளியை நிரப்பி சீமெந்தின் திண்மையை நிரவும், அதைவிட அவற்றை சிறு கற்களாக உடைத்தால் 'சல்லிக்கல்' இதுவும் பலதரத்தில் அமையும். இவற்றை உடைக்கும் தொழிலகத்தில் கொட்டுப்பட்ட தூள் கருங்கற்தூசு மிகப் பெறுமதியானதாக மாறியுள்ளது.

கல்லின் எந்த துண்டும் வீணாகாது. இவை மட்டுமா? இந்த மண்ணில் வாழும் அத்தனை குடும்பங்களிலும், அரைக்க அம்மியாய், ஆட்டுக்கல்லாய் உரலாய் இடிக்க, உரைகல்லாய் உரைக்க, கிணற்றடியில் சலவை செய்யும்கல்லாய் இருக்கும்பாறைகள் எல்லாம் பூமிக்குள்ளிருந்து செப்பமாக்கப்பட்டு எமக்கு கிடைத்ததுதான். அதை செய்த மக்கள் யார்? வழிபடும் கோவிலாக இவர்கள் வடிவமைத்த சிற்பங்களாக உள்ள சிலைகளை செய்தவர்களும் இவர்களில் அடங்குவர். பாறைகளை வைத்து நடைபெறும் இந்த தொழிலில் உள்ள சாதக பாதக விளைவுகளையும் பயன்களையும் வருகிற கட்டுரைகளில் பார்க்கலாம். (உசாத்துணை:ஜே.பீ. லூயிஸ் வன்னிமாவட்டங்கள் கையேடு)



# ஊழலற்ற எதிர்காலத்தை உருவாக்குதல்: ஒரு கூட்டு முயற்சி



ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒரு கூட்டு அணுகுமுறையைக் கோருகின்றது. வெவ்வேறு பங்குதாரர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை பார்ப்போம்.

• அரசாங்கங்கள்: மேற்கூறிய உத்திகளை செயல்படுத்துவதன் மூலம், ஊழலை தடுக்கக்கூடிய மற்றும் ஒருமைப்பாட்டை வளர்க்கும் சூழலை அரசாங்கங்கள் உருவாக்க முடியும்.

• சர்வதேச நிறுவனங்கள்: வளரும் நாடுகளில் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை ஆதரிக்க பலதரப்பு நிறுவனங்கள் தொழில்நுட்ப உதவி, நிதி ஆதாரங்கள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்க முடியும்.

• தனியார் துறை: வணிகங்கள் நியாயமான மற்றும் வெளிப்படையான சந்தையில் ஒரு விருப்பமான ஆர்வத்தைக் கொண்டுள்ளன. வணிகங்கள் தங்கள் சொந்த செயல்பாடுகளுக்குள் நெறிமுறை நடைமுறைகளை ஊக்குவிக்கலாம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூகத்துடன் பங்குதாரர்களாக இருக்கலாம்.

• குடிமக்கள்: சாதாரண குடிமக்கள் இறுதி கண்காணிப்பாளராக செயலாற்ற முடியும். தகவலறிந்து இருப்பதன் மூலமும், வெளிப்படைத்தன்மையைக் கோருவதன் மூலமும், ஊழலைப் புகாரளிப்பதன் மூலமும், குடிமக்கள் தங்கள் தலைவர்களை பொறுப்பாக்க முடியும்.

ஊழல் ஒரு சிக்கலான பிரச்சினை. ஆனால் அது தீர்க்க முடியாதது அல்ல. அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, மூலோபாய நடவடிக்கை மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்புடன், வளரும் நாடுகள் ஊழலின் பிடியில்லாத எதிர்காலத்தை உருவாக்க முடியும். வளங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படும் எதிர்காலம், அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, ஒவ்வொரு குடிமகனும் செழிக்க வாய்ப்பு உள்ளது.

ஊழலுக்கு எதிரான இலங்கையின் போராட்டம்: பொருளாதார மீட்சிக்கான திறவுகோல்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது அபிவிருத்தியடைந்து வரும் தேசத்தில் ஊழலின் அழிவுகரமான தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஊழலை ஒழிப்பது ஒரு தார்மீக கட்டாயம் மட்டுமல்ல் பொருளாதார மீட்சி மற்றும் சர்வதேச மரியாதைக்கு இது ஒரு முக்கியமான படியாகும். இலங்கை எவ்வாறு ஊழலைக் கையாள்வது மற்றும் மிகவும் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்புவது எவ்வாறு என்று இப்பொழுது பார்ப்போம்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

### வலுப்படுத்தும் நிறுவனங்கள்:

• சுதந்திரமான நீதித்துறை: சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் ஒரு வலுவான, சுதந்திரமான நீதித்துறை, தண்டனையிலிருந்து விலக்கப்படுவதை சட்டரீதியாக கட்டுப்படுத்துவதோடு ஊழல் அதிகாரிகளை பொறுப்புக்கூறுவதை ஊக்குவிக்கின்றது.

• ஊழல் எதிர்ப்பு ஆணையம்: போதுமான ஆதாரங்கள் மற்றும் புலனாய்வு அதிகாரங்களுடன் ஒரு சுயாதீனமான ஊழல் எதிர்ப்பு ஆணையத்தை (Anti-Corruption Commission-ACC) மேம்படுத்துவது மிகவும் முக்கியமானது. யுஊஊ அரசியல் தலையீடு இல்லாமல் இருக்க வேண்டும்.

• பொலிஸ் சீர்திருத்தம்: இலங்கையின் பொலிஸ் படைக்கு பயிற்சியை மேம்படுத்துவதற்கும், இலஞ்சத்தை நிவர்த்தி செய்வதற்கும், பொது நம்பிக்கையை வளர்ப்பதற்கும் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. சமூகக் காவல் முயற்சிகள் நெருக்கமான உறவுகளை வளர்த்து, ஊழலைப் புகாரளிக்க குடிமக்களை ஊக்குவிக்கும்.

### வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல்:

• தகவல் அறியும் உரிமை (Right to Information – RTI): அரசாங்க ஆவணங்கள் மற்றும் தரவுகளுக்கான பொது அணுகலை உறுதிப்படுத்தும் வலுவான தகவல் உரிமைச் சட்டத்தை இயற்றுவது அவசியம். இது குடிமக்கள் அரசாங்க செலவினங்களையும் முடிவெடுப்பதையும் ஆய்வு செய்ய அதிகாரம் அளிக்கின்றது.

• திறந்த பட்ஜெட் மற்றும் கொள்முதல்: அரசாங்க வரவு செலவு கணக்குகள் மற்றும் கொள்முதல் செயல்முறைகளை ஆன்லைனில் வெளியிடுவது வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கின்றது மற்றும் மறைக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கான வாய்ப்புகளை குறைக்கின்றது.

• புகார் அளிப்போர் பாதுகாப்பு (Whistleblower Protection): ஊழல் நடைமுறைகளைப் புகாரளிப்பதை ஊக்குவிப்பதற்கு, பதிலடி கொடுப்பதில் இருந்து புகார் அளிப்போர்களைப் பாதுகாக்கும் வலுவான சட்டக் கட்டமைப்பு முக்கியமானது.

### குடிமக்களை மேம்படுத்துதல்:

•பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள்: ஊழலை எதிர்த்துப் போராடுவதில் பொதுமக்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிக் கற்பிப்பது மிகவும் முக்கியமானது. கல்விப் பிரச்சாரங்கள், ஊடகங்கள் மற்றும் குடிமை ஈடுபாடு முயற்சிகள் மூலம் இதை அடைய முடியும்.

•சிவில் சமூக பங்கேற்பு: துடிப்பான சிவில் சமூகத்தை ஆதரிப்பதும் வளர்ப்பதும் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்துகின்றது. சிவில் சமூக அமைப்புகள் (Civil society organizations-CSOs) அரசாங்க நடவடிக்கைகளை கண்காணிக்கலாம், சீர்திருத்தங்களுக்கு வாதிடலாம் மற்றும் பொதுக் கருத்தைத் திரட்டலாம்.

### குறிப்பிட்ட சிக்கல்களைத் தீர்ப்பது:

•அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (SOEs): திறமையான மேலாண்மை, நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிப்படுத்த ளுழுநு களை சீர்திருத்துவது இன்றியமையாதது. சில SOEகளை தனியார்மயமாக்குவது கவனமாக மதிப்பீட்டிற்குப் பிறகு பரிசீலிக்கப்படலாம்.

•பிரச்சார நிதி சீர்திருத்தம்: அரசியலில் பணத்தின் செல்வாக்கைக் குறைக்க பிரச்சார நிதியுதவியை ஒழுங்குபடுத்துவது ஊழலைக் கட்டுப்படுத்த உதவும்.

### சர்வதேச ஒத்துழைப்பு:

•IMF மற்றும் உலக வங்கி: இலங்கை அதன் ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தவும் தொழில்நுட்ப உதவிகளை அணுகவும் சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கியின் ஆதரவைப் பெற முடியும்.

•சிறந்த நடைமுறைகளைப் பகிர்தல்: ஊழலை வெற்றிகரமாகச் சமாளித்த பிற நாடுகளுடன் ஒத்துழைப்பது மதிப்புமிக்க நுண்ணறிவுகளையும் உத்திகளையும் வழங்க முடியும்.

ஊழலுக்கு எதிரான ஒரு முக்கிய உலகளாவிய முயற்சியான UNCAC இன் 20 ஆண்டுகளை பூர்த்தி செய்து டிசம்பர் 9 அன்று சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் கொண்டாடுகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், 'UNCAC at 20: Uniting the World against ஊழலுக்கு எதிராக', ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் உலகளாவிய அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றது. ஊழல் நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் பொருளாதாரத்தை பாதிக்கிறது, வணிகம் முதல் கல்வி வரையிலான துறைகளை பாதிக்கின்றது.

190 மாநிலக் கட்சிகளுடன், UNCAC லஞ்சம், மோசடி மற்றும் பலவற்றைக் குறிக்கின்றது, உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் சொத்து மீட்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. அட்லாண்டாவில் டிசம்பர் 11-15 வரை, மாநிலக் கட்சிகளின் மாநாடு (Conference of the States - COSP) UNCAC செயல்படுத்தல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும். COSP க்கு இணையாக, UNODC மற்றும் UN குளோபல் காம்பாக்ட் இணைந்து நடத்தும் ஒரு மாறும் தனியார் துறை மன்றம், வணிக ஒருமைப்பாட்டின் முக்கிய பங்கை ஆராயும். ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும், நெறிமுறை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும், உலகளவில் இணக்கத்தை உறுதி செய்வதற்கும் பொது-தனியார் கூட்டாண்மையின் அவசியத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. வணிகம் மற்றும் நிர்வாகத்தில் ஒருமைப்பாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒன்று சேர்ந்து, ஊழலற்ற உலகத்திற்கான தீர்வுகளை முன்னெடுத்துச் செல்ல எதிர்காலத்திற்கு வழிகாட்டுகின்றது.

ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒரு நீண்ட மற்றும் கடினமான பயணமாக இருக்கும், இதற்கு நிலையான அரசியல் விருப்பம், பொது ஈடுபாடு மற்றும் அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், இலங்கையானது மிகவும் வெளிப்படையான மற்றும் பொறுப்பான அமைப்பை உருவாக்கி, முதலீட்டை ஈர்த்து, பொருளாதார வளர்ச்சியை உயர்த்தி, சர்வதேச மரியாதையை மீட்டெடுக்க முடியும்.

ஊழலற்ற இலங்கையானது இறுதியாக அதன் உண்மையான பொருளாதார ஆற்றலைத் திறந்து, அதன் அனைத்து குடிமக்களுக்கும், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உறுதிசெய்யும்.


## தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

### கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# சூழல் நேயமிக்க பசுமை புரட்சியாளன்

ஞானம் கவினி

**“குண்டும் குழியுமான ரோட்டுக்கால சைக்கிளோடு முதுகெல்லாம் நனைஞ்சு சேட்டால வியர்வை வழியும்.**

**அப்பதான் மரங்களின்ர அருமை எனக்கு அதிகமாக தெரிய தொடங்குச்சுது” என்று மரங்களோடான தனது ஆரம்ப காதல் பற்றி மகிழ்ச்சியாக விவரிக்கிறார்.**

யாழ்ப்பாணத்தின் பூர்வீக கிராமங்களில் ஒன்றான நீர்வேலி பிரதேசத்தில் தன்முனைப்போடு சூழலில் பசுமையாக்கும் அளப்பெரும் பணியில் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார் பாக்கியநாதன் சசிகுமார் தனது ஆசிரியர் பணியை எவ்வளவு காதலிக்கி றாரோ அதை போலவே பசுமை தொடர்பான விடயங்களிலும் அது இது அக்கறை கொண்டி ருக்கிறார்.

2020 ஆம் ஆண்டு தேசம் முழுவதையும் கொரோனா ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த காலப்பகுதி, அப்போது தனக்கு கிடைத்த ஓய்வு காலத்தை மிகவும் சரியாக பயன்படுத்தி இருக்கிறார் ஆசிரியர் சசிகுமார்.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே பசுமை மீதான தீராத ஆர்வமும் மரங்கள் தொடர்பான தேடலும் இவருக்கு இருந்திருக்கிறது யாழ்ப்பாணம் நோக்கி தனது மாலை நேர கற்றலுக்காக செல்கின்ற பொழுதெல்லாம் நிழல்களுக்காக மரங்களை தேடிய சசிக்குமாருக்கு மரங்கள் பற்றிய தேடல் அதிகமாக உருவாகி இருக்கிறது.

அவர் தன்னுடைய சிறிய வயது அனுப வங்களை இவ்வாறு பகிர்ந்து கொள்கிறார்.

“நீர்வேலியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு போகேக்க அப்போ இருந்த குண்டும் குழியுமான பாதைகளுக்கால சைக்கிள் ஓடி களைத்து போய் எங்கேயாவது இருக்கின்ற ஒரு மதத்தின் கீழே இளைப்பாறுவதற்காக சைக்கிளை நிறுத்துவோம். அப்போதிருந்தே இந்த மரங்களோடான எனது காதல் ஆரம்பித்திருக்க வேண்டும் .

சின்ன வயதில் எனக்குள் இருந்த ஆர்வத்திற்கு ,கொரோனா காலத்தில் எங்கள் எல்லோருக்கும் அமைந்த ஓய்வு மிகப்பெரும் வரமாக அமைந்து விட்டிருந்தது. கொரோனா காலத்தில் தான் நான் இத்தகைய பசுமையாக்கள் திட்டங்களில் முழுமையாக என்னை ஈடுபடுத்த முடிந்தது. அப்போது நான் மரங்களைப் பற்றி தேடுவதும் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து வளர்ப்பதும் என்று சின்ன சின்ன விடையங்களில் எனது கவனத்தை செலுத்தி வந்திருக்கிறேன்.

“குண்டும் குழியுமான ரோட்டுக்கால சைக்கிளோடு முதுகெல்லாம் நனைஞ்சு சேட்டால வியர்வை வழியும்.

அப்பதான் மரங்களின்ர அருமை எனக்கு அதிகமாக தெரிய தொடங்குச்சுது” என்று மரங்களோடான தனது ஆரம்ப காதல் பற்றி மகிழ்ச்சியாக விவரிக்கிறார்.

பசுமையின் மீதான தீராத ஆர்வத்தோடு என்றும் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு தொழில்நுட்ப பாட ஆசிரியரான உங்களுக்கு இந்த மரங்களை வளர்ப்பதும் பசுமைகளை உருவாக்குவதும் தொடர்பான வேலைகள் சிரமத்தை தரவில்லையா ? நேரத்தை எவ்வாறு சமன் படுத்துகிறீர்கள் என்று வினவினோம்.

அதுக்கு அவர் உண்மையில் மனதுக்குப் பிடித்த துறை ஒன்றில் நேரத்தை செலவிடுவதற்கு யாருக்குமே சலிப்பு ஏற்படாது. உதாரணமாக கிரிக்கெட் விளையாட்டினை ஆர்வமாக விளையாடுகின்ற ஒருவன் தனக்கான சந்தர்ப்பத்தை எப்படியாவது அமைத்து விடுவான்.

இப்படித்தான் நான் எனது ஆசிரியர் தொழிலோடு சேர்த்து எனக்கு மிகவும் பிடித்த மரங்களை உருவாக்குகின்ற பணியில் எனது நேரத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறேன் .சொல்லப்போனால் இது உண்மையில் எனக்கு ஒரு சுகமான சுமை தான். என்று எங்களை ஆச்சரியப்பட வைக்கிறார்.



ஆசிரியர் பாக்கியநாதன் சசிகுமார்

நேரமில்லை நேரமில்லை என்று ஓடிக்கொண்டிருக்கிறார் பலருக்கு மத்தியில் இருக்கின்ற நேரத்தை மிகவும் சரியாக பயன்படுத்துகின்ற இவர் போல பல மனிதர்கள் இன்னும் நம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் குடும்பத்தினர் இடையே இவருக்கான ஆதரவு அவ்வளவாக இருந்திருக்கவில்லை .ஒரு ஆசிரியராக இருந்து கொண்டு இதை எப்படி சாத்தியமாக்கப் போகிறாய்? என்று பல கேள்விகள் எழுந்து கொண்டுதான் இருந்திருக்கிறது.எல்லாவற்றையும் தாண்டி தனக்கு பிடித்த இந்த பாக்கியநாதன் சசிகுமார்

பசுமையாக்கல் துறையில் தடம் பதித்த ஆசிரியர் சசிகுமார் இன்று 25க்கும் மேற்பட்ட பல பசுமையாக்கல் திட்டங்களை நிறைவேற்றி பல வெற்றி கதைகளை தன தாக்கியிருக்கிறார்.

இதனைப் பற்றி அவர் கூறுகையில், பல அரசு அரச சார்பற்ற நிறுவனங்களோடு நேரடியான , முறைப்படியான தொடர்புகள் எங்களுக்கு இருக்கிறது . அவர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நாங்கள் பல்வேறு வேலை திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்திய வருகிறோம் . உண்மையில் பசுமையாக்கல் என்பது அவ்வளவு சாதாரணமான விடயம் அல்ல .ஒரு உயிரை உருவாக்கி தக்க வைப்பது போன்ற பலத்த சவால்கள் அங்கே இருக்கிறது .

ஆனாலும் முயற்சியோடும் விருப்பத்தோடும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் எப்போதும் தோல்வியில் முடியாது .அதற்கு எங்களது நிறுவனம் ஒரு உதாரணமாக இருக்கிறது. பிரதேச சபைகள் ,பாடசாலைகள் ,வங்கிகள் போன்று பல அரசு நிறுவனங்களோடு சேர்ந்து நாங்கள் நடத்துகின்ற திட்டங்களில் பெருமளவானவை சமூகம் சார்ந்த






நல்ல அக்கறையுடைய மக்களாலேயே நடாத்தப்படுகின்றது அவர்களிடத்திலே எங்களுடைய மரக்கன்றுகளை நாங்கள் வழங்குகின்ற போது அவர்கள் வெற்றிகரமான திட்டங்கள் அமைவதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

தற்போது யாழ் பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம் , யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப விவசாய பீடங்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிழக்கு பல்கலைக்கழகத்திற்கான பசுமையாக்கல் வேலைத்திட்டங்கள் என்று பல்வேறுபட்ட அரசு நிறுவனங்களோடு எங்களுடைய திட்டத்தை நெறிப்படுத்தி வருகின்றோம்.

கன்றுகளை உருவாக்குவதோடு மற்றும் நின்று விடாமல் இன்றுஆயிரத்திற்கும்மேற்பட்ட பனம் விதைகளை விதைத்திருக்கிறோம். இன்னும் லட்சம் பனம் விதைகளை விதைப்பதற்கு திட்டமிட்டு இருக்கிறோம்என்கிறார்.

இரண்டு வருடங்களில் மிகப்பெரிய அளவில் தன்னுடைய திட்டத்தை நெறிப்படுத்தி வந்த ஆசிரியர் சதீஷ்குமார் தற்போது தனது நிறுவனத்தை வலிந்து உதவும் அமைப்புக்களின் கீழே Green layer environmental organization ஆக பதிவு செய்திருக்கிறார்.

தற்போது இவருடைய நிறுவனம் ஒரு குழுமமாக இயங்கி வருகின்றது. தற்போது புலம்பெயர் தேசத்தில் இருக்கின்ற நம்முடைய உறவுகள் தம்முடைய உறவுகளின் நினைவு நாட்கள் , பிறந்த தினங்கள் போன்ற வைபவங்களுக்கு மரக்கன்றுகளை வழங்குவதற்காக அழைப்பதோடு அன்பளிப்புகளையும் வழங்குகிறார்கள். அந்த அன்பளிப்புகளை எல்லாம் ஒன்று திரட்டி இன்னும் மரங்களை உருவாக்கி இலவசமாக கொடுக்கும் திட்டங்களை மேலும் மேலும் மெருகூட்டிக் கொண்டிருக்கிறார் ஆசிரியர் பாக்கியநாதன் சசிகுமார்.

இவருடைய திட்டங்களில் சிறப்பான அம்சம் என்னவென்றால் உடனடியாக வீடுகளையும் கட்டிடங்களுக்கு நிர்மாணிப்பவர்களுக்கு வெளிநாடுகளில் அமைப்பதை போல, இரண்டு மூன்று வருடங்கள் வளர்ந்த பெரிய மரங்களை அப்படியே அந்த வளாகத்தில் நாட்ட கூடிய வகையில் அன்பளிக்கிறார்கள் இதனால் வறண்ட இடங்கள் கூட உடனடியாக பசுமையான சோலையாக மாறக்கூடிய அளவிற்கு மிகவும் அற்புதமான கை காரியம் ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள்.

அதோடு பசுமையாக்கள் திட்டங்களில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கின்ற பலருக்கு கடந்த காலங்களில் விருதுகளையும் பாராட்டுகளையும் வழங்கி அவர்களை இன்னும் பசுமை திட்டங்களில் முன்னோக்கி செல்வதற்கான ஆர்வத்தையும் வழங்குகிறார்கள்.

தனி ஒரு மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மரங்கள் வளர்க்கின்ற திட்டம், இன்று ஒரு கட்டமைக்கப்பட்ட அமைப்பாக வளர்ந்து இலங்கையின் சகல பிரதேசங்களிலும் மிகவும் துரித பசுமை புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

உண்மையில் தன்னுடைய ஆசிரியர் தொழிலோடு சேர்த்து இவ்வாறான மிகப்பெரிய பசுமை கட்டமைப்பை நடத்திச் செல்வது என்பது அவ்வளவு சாதாரணமான செயல் அல்ல.

இவர் சமூகங்களில் மாத்திரமன்றி பாடசாலைகளிலும் தனது மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வளர்ப்பதையும் பசுமை புரட்சியை உருவாக்குவது பற்றியதுமான பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறார். வடக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் கிட்டத்தட்ட 95 வீதமான பாடசாலைகளில் தன்னுடைய மர நடுகை திட்டத்தை நெறிப்படுத்தி இருக்கின்ற இவர் தற்போது தொடர்ந்து வடக்கு தாண்டியும் இலங்கையில் ஒவ்வொரு பாகங்களிலும் தன்னுடைய இலவச பணியைச் செய்வதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கிறார். இத்தகைய மனிதர்களை இனம் கண்டு சமூகத்தின் பசுமை புரட்சிக்கு நாங்களும் வித்திட வேண்டும்.



# லாபம் தரும் கொய்யாப்பழம்

**தற்பொழுது இலங்கையிலும் கொய்யாபயிர்செய்கைசடுதியாக அதிகரித்திருக்கின்றது. கொய்யாசெடியானது ஆரம்ப காலத்தில் வீடு தோட்டங்களிலும், வயலின்வரப்புகளிலும் வளர்க்கப்படும் மர வகையாக இருந்துவந்தது. தற்போது தான் பல விவசாயிகள் இலங்கையில் வர்த்தக நோக்கத்திற்காக உற்பத்தி செய்கின்றார்கள்.**

ஆனந்தன் பிரேம் நாத்
லக்சி பண்ணை



மெக்ஸிகோ நாட்டில் உள்ள கல்வில்லோ நகரம் தான் கொய்யாவின் பிறப்பிடமாக கருதப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கல்வில்லோ நகரில் நடக்கும் கொய்யா கண்காட்சி உலகப்புகழ் பெற்றதாகும். வர்த்தக நோக்கங்களுக்காக இந்தியா,சீனா ,தாய்லாந்து,மியான்மர் நாடுகளில் அதிகம் வளர்க்கப்படுகிறது.

தற்பொழுது இலங்கையிலும் கொய்யா பயிர் செய்கை சடுதியாக அதிகரித்திருக்கின்றது. கொய்யாசெடியானது ஆரம்ப காலத்தில் வீடு தோட்டங்களிலும், வயலின் வரப்புகளிலும் வளர்க்கப்படும் மர வகையாக இருந்து வந்தது. தற்போது தான் பல விவசாயிகள் இலங்கையில் வர்த்தக நோக்கத்திற்காக உற்பத்தி செய்கின்றார்கள்.

வர்த்தக நோக்கத்திற்காக பயிரிடுவதாக இருந்தால் ஹைபிரிட் ரகங்களை தேர்ந்தெடுத்து நடவு செய்ய வேண்டும். சூபயிரிடும் முறை. கொய்யாவில் பல ரகங்கள் உள்ளது அதில் அலகாபாத். லக்னோ - 46. லக்னோ-49. பனாரஸ், ரெட் பிளஷ். அர்கா அமுல்யா. அர்கா மிருதுளா, ஆகிய ரகங்களில் ஒன்றை தேர்ந்தெடுத்து நடவு செய்ய வேண்டும்.

ஜூன்,ஜூலை,ஆகஸ்ட் மாதங்கள் கொய்யா நடவு செய்வதற்கு ஏற்ற மாதங்கள் ஆகும். செம்மண்,கரிசல்மன்,களிமண் இருவாட்டி மண், நிலங்களில் நன்கு வளரும் தன்மை கொண்டது. மணல் மான், உவர் மண், சதுப்பு நிலங்கள் போன்ற இடங்களில் வளராது. பயிரிட தேர்வு செய்யப்பட்ட நிலத்தை நன்கு உழவு செய்ய வேண்டும். பின்பு 15 அடி இடைவெளியில் ஒன்றரை அடி நீள,அகல,ஆழம் உள்ள குழிகளை எடுக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 170 கொய்யா கன்றுகள் வரை நடலாம். பின்பு ஒவ்வொரு குழிக்கும் 10 கிலோ தொழுஉரம், மக்கிய உரம், அல்லது மண்புழு உரம் இட்டு மேல்மண் கலந்த கலவை கொண்டு குழியை மூட வேண்டும். பாலிதீன் பையில் அல்லது தொட்டியில் உள்ள செடிக்கு எவ்வித சேதமும் ஆகாமல் எடுத்து குழியின் மத்தியில் நடவேண்டும். மிக உயரமான நாற்றுகளாக இருந்தால், அதன் அருகே இரண்டு காய்ந்த குச்சிகளை நட்டு, கொய்யா செடியையும் குச்சியையும் இணைத்து கட்ட வேண்டும்.

நாற்று நடவு செய்தவுடன் குழி முழுவதும் நனைந்து, மண் இறங்கி இறுக்கம் அடையும் அளவுக்கு தண்ணீர் விட வேண்டும். பின்பு மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும். அதன்பின் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து 2 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும்.



### உரங்கள் இடும் முறை

மார்ச்,அக்டோபர் மாதங்களில் ஒவ்வொரு மரத்திற்கும். தொழுஉரம் அல்லது ஆட்டு எரு 10 கிலோ, மண்புழு உரம் 2 கிலோ. ஒவ்வொரு 6 மாதத்துக்கும் 2, 3 அடி வட்டப்பாத்தியில் இட வேண்டும்.

ரசாயன உரம் போட விரும்புபவர்கள் அரை கிலோ தழை,மணி, சாம்பல் சத்து உள்ள ரசாயன உரங்களை கலந்து மரத்தின் வெளி வட்டத்தில் குழி எடுத்து ஒரு கூடை தொழு எருவுடன் கலந்து போட்டு மண் மூடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

கொய்யா செடிகளை பொறுத்தவரை நோய் தாக்கம் மிகக் குறைவாக இருக்கும்





சில நேரங்களில் மாவு பூச்சி, இளைச்சுருல் போன்ற பிரச்சனைகள் வரும். இதனை

கட்டுப்படுத்த இயற்கை கிருமிநாசினியான கற்பூர கரைசல் அல்லது மூலிகை கரைசல் அல்லது அக்கினி அஸ்திரா போன்ற கரைசலை பயன்படுத்தலாம்.

செடிகள் நட்டு 11/2 வருடத்திலிருந்தே காய் பிடிக்க ஆரம்பித்து விடும். காய்கள் சற்று பெரிதாக வரும் சமயத்தில் காய்களை சுற்றி பாலித்தீன் அல்லது கடதாசி கொண்டு சுற்றி கட்டி விட வேண்டும். அப்போதுதான் சேதுமில்லாத பழங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்த முடியும். பூத்ததிலிருந்து 5 மாதங்கள் கழித்து கனிகளை அறுவடை செய்யலாம். ஒரு ஹெக்டருக்கு 25 டன் வரை விளைச்சல் கிடைக்கும். ஊடுபயிராக குறைந்த வயதுடைய அவரை, கத்தரி ஆகியவற்றை கொய்யா கிளைகள் வரும் வரை

வளர்க்கலாம். கொய்யா பழங்களை அறுவடை செய்ய முன்பு ஓரிரு வியாபாரிகளை நம்பாமல் பல வியாபாரிகளோடு தொடர்பினை ஏற்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

காரணம் கொய்யா பழங்களை கொள்வனவுசெய்யும் வியாபாரிகள் சிறிய அளவிலே கொள் முதல் செய்வார்கள். உங்களுடைய கொய்யா பழத்தின் நன்மைக்கு ஏற்ற வியாபாரமும் ஏற்ற கிரகங்களோடு இருக்கலாம்ஆனால் கொய்யாப்பழம் எப்போதும் நல்ல சந்தை வாய்ப்பு பெறுகின்ற சத்துமிக்க ஒரு பழமாகும்.



**கொய்யா செடிகளை நிர்வாகம்:**

செடியை சுற்றி களைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். களைகளின்

வளர்ச்சிக்கு ஏற்றவாறு அதனை நீக்க வேண்டும். செடியின் அடிபாகத்தில் குறுக்கும் நெடுக்குமாக தோன்றும்கிளைகளை நீக்க வேண்டும். மேல்நோக்கி நீண்டு வளரும் கிளைகளின் நுனியை கிள்ளி எடுத்து பக்கவாட்டு கிளை வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும். இல்லையெனில் கிளைகள் இல்லாமல் செங்குத்தாக வளரும்.



# கறுத்த மீன்கள் கிழக்கு கரைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது ஏன்?

ஏ.எம். றியாஸ் அகமட்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
தலைவர், உயிரியல் விஞ்ஞானங்கள் பிரிவு
பிரயோக விஞ்ஞான பிரிவு,
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

**இந்த நிகழ்வுகளுக்கு நோய்கள் காரணமாக இருக்கலாம். வெப்பநிலை உயர்ந்து இருக்கலாம். வெப்பநிலை குறைந்து இருக்கலாம். குளிர் நீர் விளைவாயிருக்கலாம். அபாயகரமான கழிவுகள் கடல் அடித்தளங்களில் புதைக்கப்பட்டிருக்கலாம். தவறுதலாக கடலில் வெளிவிடப்பட்ட இரசாயனக் கழிவுகளாக இருக்கலாம் போன்ற உறுதிப்படுத்தப்படாத காரணங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் இது போன்ற நிகழ்வுகளுக்கு தெளிவான காரணங்களும் முன்வைக்கப்படவில்லை.**

கடந்த சில நாட்களாக இலட்சக்கணக்கான சிறிய கறுத்த மீன்கள் கிழக்கு கரைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது ஏன்?

அறிமுகம்

கடந்த சில நாட்களாக கிழக்குக் கரையோரங்களில் குறிப்பாக மட்டக்களப்பிலிருந்து கல்முனை வரை சிறிய கறுத்த மீன்கள் கூட்டம் கூட்டமாக கரையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. இது மீனவர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் வாதப்பிரதிவாதங்களையும், சில வகையான ஐயங்களையும் தோற்றுவித்துள்ளன.



இவ்வாறு மீன்கள் உயிருடன் கரையொதுங்குவதும், அல்லது உயிருடன் கரையொதுங்கி ஆயிரக் கணக்கில் இறப்பதும் அல்லது ஆயிரக்கணக்கில் இறந்து கரையொதுங்குவதும் ஒன்றும் புதிதல்ல. காலத்திற்கு காலம் ஒவ்வொரு 5-6 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுவது வழக்கம்.

மீனின் உயிரியல்:

Odonus niger என்ற விஞ்ஞான பெயரையுடைய, ஆங்கிலத்தில் சநனவழுழவாநன triggerfish என அழைக்கப்படும் பாலிஸ்ரிடே குடும்பத்தைச் சேர்ந்த இந்த மீன் இந்திய பசுபிக் பெருங்கடல்களில் வசிக்கின்றது. இந்த மீன்களின் மனநிலை, உணவு, உணவைப் பெறுதல், கடல் நீரின் பண்புகள் போன்றன மாறுபடும்போது ஊதா நிறத்திலிருந்து, நீலத்திற்கும், பின் நீலப் பச்சை நிறத்திற்கும் மாறக்கூடியன. தாவர பிளாந்தன்கள், விலங்குப் பிளாந்தன்கள் போன்றவற்றை உண்பதுடன் சில சமயங்களில் சிறிய மீன்களையும் உண்கின்றன.

முருகைக் கற்பாதைத் தொகுதியை வாழிடமாகக் கொண்ட இந்த மீனின் மொத்த நீளம் 11 சென்ரிமீற்றர். வால்வரை வரை நீளம் 8 சென்ரிமிற்றர். வாலின் நீளம் 3 சென்ரிமீற்றர். முதுகுப்பக்க செட்டை ஒரு பெரிய முள்ளு, 33 மென்முள்ளு. வாற்செட்டை 40 மென்முள்ளு, குதச் செட்டை 24 மென்முள்ளு, இடுப்புச் செட்டை 14 மென்முள்ளு போன்றவைகளுடன் காணப்படுகின்றது. நீருக்கு வெளியே வரும்போது அடர்ந்த கறுத்த நிறமாக காணப்படும் இம் மீன், நீருக்குள் ஊதா சார்ந்த கறுப்பு நிறமாக செட்டைகள் நீல நிறமாகவும், அதேவேளை வால் பகுதியின் இரு முனைப் பகுதிகளும் சிவப்பு நிறத்திலும் காணப்படுகின்றன. இந்த மேற்பக்க வாயையும் கொண்டு காணப்படுகின்றது. இந்த மீனை சாப்பிடலாமா? இல்லையா? என்பது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும். எனினும் வீடுகளில் அலங்கார மீன்களாக வளர்க்கப்படக்கூடிய அளவு அத்தனை தகுதிகளையும் இந்த மீன்கள் கொண்டு காணப்படுகின்றது. இருந்தும் இயற்கையான கடற்பகுதியிலேயே இதன் இனப்பெருக்கம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

**கரையொதுங்குவதற்கான காரணங்கள்:**

இவ்வாறு கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதற்கு அல்லது கரையொதுங்கி இறப்பதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படலாம்.

1) நோய்த் தொற்று
2) காலநிலை மாற்றம்,
3) பிழையான அல்லது சட்டவிரோதமான மீன்பிடிமுறைகள் (டைனமைட், சயனைட் மீன்பிடி முறைகள்),
4) இயந்திரப் படகுகள், கப்பல்களிலிருந்து தவறுதலாகவோ அல்லது நோக்கமாகவோ கொட்டிவிடப்படும் இரசானப்பொருட்கள்,
5) கடலின் அடித்தளத்தில் புதைக்கப்படும்



இரசாயன அணுக்கழிவுகள், இரசாயனக் கழிவுகள்,

6) ஆயுதங்களை பாவித்தல் அல்லது பரீட்சித்துப் பார்த்தல்

7) விலங்குகளின் அசாதாரண நடத்தைகள் அனர்த்தங்களுக்கான முன்னறிவிப்பு

இதற்குப் பொருத்தமான காரணம் எதுவென்று மேலோட்டமாக கூறிவிட முடியாது. மேலே கூறியதற்கு அப்பாலும் வேறு காரணங்களும் இருக்கலாம். அவைகள் ஆய்வுகளின் மூலமே நிருபிக்கப்பட வேண்டும்.

காலநிலை மாற்றம் காரணமென்றால், காலநிலை மாற்றம்தான் காரணம் என்ற இரு சொற்களை சொல்லிவிட்டு இலகுவாக சென்றுவிட முடியாது. சமுத்திரங்களின் மேற்பரப்பு நீரோட்டம் (10 சதவீதமான நீர் இதற்கு உட்படுகின்றது), கீழிருந்து மேற்பக்கமான நீரோட்டம் (மீதி 90 சதவீதம் நீர் இதற்கு உட்படுகின்றது. சமுத்திரங்களின் வெப்பநிலையை மாற்றுவதில் செல்வாக்கு செலுத்துவதும், மீன்களுக்கு அதிக போசணைப் பொருட்கள், உணவுகள் போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு வந்து மீன்பிடியை அதிகரிக்கச் செய்வதும் இந்த நீரோட்டம்தான்), இந்த நீரோட்டங்களை உருவாக்கும் சூரிய வெப்பம், காற்று, புவியீர்ப்பு விசை, கொரியோலிஸ் விளைவு போன்றவைகளை வைத்துக் கொண்டு அதனால் சமுத்திரத்தின் வெப்பநிலை (ஒரு வேளை அதிகரிக்கலாம் அல்து குறையலாம்), உவர்த்தன்மை, அதனுடன் விலங்கு அலையுயிரின் அடர்த்தி, ஒட்சிசனின் அடர்த்தி, கடல் உயிரினங்கள் சமுத்திரத்தின் வாழும் பகுதிகள் (அடியில், நடுப்பகுதியில், மேற்பகுதியில்), மற்றும் அதன் உணவுமுறைகள் போன்றவைகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இதனைத் தவிர மற்றையவைகளுக்கும் சாத்தியம் இல்லையென்று எதனையும் நிராகரிக்கவும் முடியாது.

கிழக்குக் கரைகளில் கடல் உயிரினங்கள் கரையொதுங்குவது போன்ற நிகழ்வுகள் இங்கு மட்டும் நடைபெறும் நிகழ்வுகள் அல்ல. கடந்த காலங்களில் அவ்வப்போதும், அண்மைய வருடங்களாக அடிக்கடியும் உலகின் பலபாகங்களிலும் நடைபெறுகின்றன. இந்த நிகழ்வுகளுக்கு நோய்கள் காரணமாக இருக்கலாம். வெப்பநிலை உயர்ந்து இருக்கலாம். வெப்பநிலை குறைந்து இருக்கலாம். குளிர் நீர் விளைவாயிருக்கலாம். அபாயகரமான கழிவுகள் கடல் அடித்தளங்களில் புதைக்கப்பட்டிருக்கலாம். தவறுதலாக கடலில் வெளிவிடப்பட்ட இரசாயனக் கழிவுகளாக இருக்கலாம் போன்ற உறுதிப்படுத்தப்படாத காரணங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் இது போன்ற நிகழ்வுகளுக்கு தெளிவான காரணங்களும் முன்வைக்கப்படவில்லை. உறுதியான முடிவுகளும் முன்வைக்கப்படவில்லை. நூற்றுக்கணக்கான ஊகங்களும், அனுமானங்களும், கொள்கைகளுமே முன்வைக்கப்படுகின்றன. இவைகள் எப்போதும் மர்மமாகவே இருக்கின்றன.

எனவே சரியான ஆய்வுகளினூடாக விடையைத் தெரிவிப்பதுதான் இந்த நேரத்தில் நாம் செய்யக்கூடியதாகும். ஆய்வுகளின் மூலம் விடையைத் தெரிவிப்பதிலுள்ள பிரச்சினை என்னவென்றால் ஊடகப் போட்டி, ஊடகப் பிரபல்யம், நான் முந்தி நீ முந்தி போன்ற காரணங்களால் அறிக்கைகள் முந்திவிடுகின்றன.

இறுதியாக ஒருவிடயம், விலங்குகளின் அசாதாரண நடத்தைக்கும், இயற்கை அனர்த்தங்களின் முன்னறிவிப்பிற்கும் எப்போதும் தொடர்பு இல்லை அல்லது எப்போதும் தொடர்பு இல்லாமலும் இல்லை. ஆனால் இது சம்பந்தப்பட்ட ஆய்வுமுறைகள் இலங்கையில் இன்னும் வளரவில்லை. சீனா போன்ற நாடுகளில் வளர்ந்திருக்கின்றன. ஆனால் எல்லா அசாதாரண நடத்தைகளும் அனர்த்தத்திற்கான முன்னறிவிப்பு என்று கொள்ளமுடியாது. அசாதரண நடத்தைகளை விலங்குகள் காட்டினாலும் (உயிரியல்), மற்றைய துறைகளான வானிலையியல், காலநிலையியல், பௌதிகவியல், இரசாயனவியல், புவியியல் போன்ற துறைகளுடன் சேர்ந்த ஆய்வுகளின் மூலமே அதனை உறுதிப்படுத்த முடியும்.

என்னைப் பொறுத்தவரை, இந்த அசாதாரண நடத்தை, சமீபகாலங்களில் உலகில் நடக்கும் சாதாரண நடத்தையில் ஒன்று என்று கருதிக்கொள்வது நன்று என நினைக்கின்றேன்.

# பெருந்தோட்ட மக்களின் தீபாவளி கொண்டாட்டம்

**தோட்டத்தில் பணிபுரியும் ஒரு அம்மாவிடம் தீபாவளி பற்றி பேசிய போது, "எங்களுடைய வீடு மழை வந்தால் தண்ணீர் தாங்க மாறிவிடும்போது ஆனாலும் நீங்க தீபாவளிக்கு மழை வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன் எனது குழந்தைகளுக்கு புத்தாண்டுகளை எடுத்துக் கொடுக்க என்னால் முடியவில்லை. அவர்களுக்கு பட்டாசையோ நல்ல உணவையோ வாங்கிக் கொடுக்கலாம் என்று என்னால் நம்பிக்கையாக சொல்ல முடியவில்லை. நல்ல மழை வந்தது என்றால் அவர்கள் மிச்சம்குழந்தைகளை பார்த்து ஏங்காமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்" என்று வேதனையோடு கூறினார்**

அமுதன்



பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணம் 10000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையின் பல தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், பிரதான இந்து மதப் பண்டிகையான தீபாவளியைக் கொண்டாடுவதற்கு சம்பள முன்பணத்தைப் பெறுவதற்காக கடந்த காலத்தில்அந்தந்த தோட்டங்களில் போராட்டங்களை நடத்தியிருந்தனர். மத்திய மலையகத்தில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், தங்கள் எதிர்கால ஊதியத்தில் இருந்து இந்தக் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக, புதிய துணிகள் வாங்குவதற்காக மற்றும் நல்ல சாப்பாடு அல்லது ஒரு எளிய குடும்ப நாளைக் கொண்டாடுவதற்காக கிட்டத்தட்ட ஒவ்வொரு வருடமும் போராடி வருகின்றனர்.

உணவுப் பொருட்களின் விலைகள் விண்ணை முட்டும் நிலையில், ஊதியங்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டு தொழிலாளர்களின் கோரிக்கைகள் கடனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. வானளாவ உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவில் தீபாவளியைக் கொண்டாட, எந்த வழியிலும் போதாத பண்டிகை முன்பணமாக 15,000 ரூபாய் மட்டுமே தொழிலாளர்கள் பெற வேண்டியிருந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், பொருளாதார நெருக்கடியின் சுமையை உழைக்கும் மக்கள் மீது சுமத்துவதற்காக சர்வதேச நாணய நிதியம் (IMF) கட்டளையிட்டுள்ள சிக்கன நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துகிறது.

கோவிட்-19 தொற்று மற்றும் உக்ரேனில் ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க-நேட்டோ போரினால் உலகளவில் தீவிரமடைந்துள்ள இலங்கைப் பொருளாதார நெருக்கடிகள் மிகவும் கடுமையான வெளிப்பாடாக உள்ளது.

சில தோட்டங்களில், தொழிலாளர்கள் மறியலில் ஈடுபட்டதுடன், முன்பணத்தை அதிகரிக்கவும், தாமதமின்றி வழங்கவும் தோட்ட நிர்வாகங்களுக்கு கோரிக்கை விடுத்தனர். மாறாக, தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாதது உள்ளிட்ட பல காரணங்களைக்கூறி, தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை முன்கூட்டியே பதிவு செய்வதை நிராகரித்தன.

பெருந்தோட்டக் குடும்பங்கள் கோதுமை மா மற்றும் அரிசி போன்ற அன்றாடப் பாவனைக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பை சமாளிக்க முடியாமல் தவிக்கின்றன. ஒரு கிலோ அரிசி 200 ரூபாவுக்கு அதிகமாகும். ஒரு கிலோ கோதுமை மாவின் விலை கிட்டத்தட்ட 300 ரூபாவாகும். தோட்டத் தொழிலாளி ஒருவரின் நாளாந்த சம்பளம் 1000 ரூபாவாகும், அது நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு உட்பட்டதாகும். இந்த ஊதியத்தை வென்றெடுக்க கூட தோட்டத் தொழிலாளர்கள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக போராட வேண்டியிருந்தது.

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட பிரிவினராவர். அவர்கள் தமது சம்பளம், வேலை நிலைமைகள் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்க அடிக்கடி போராட வேண்டியுள்ளது.

பெருந்தோட்டத்தின் பிரதான நகரமான ஹட்டனுக்கு பண்டிகைக் காலங்களில் சிறு வியாபாரிகள் வந்து தங்களுடைய பொருட்களை தற்காலிகமாக நிர்மாணித்த கொட்டகைகளில் விற்பனை செய்வது வழமையாக இருந்த போதிலும், இம்முறை மிகக் குறைவான வர்த்தகர்களே அங்கு காணப்பட்டனர். இந்நிலையில்

சுற்றாடல், வனசீவராசிகள், வனவளங்கள், நீர் வழங்கல் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு வெளியிட்ட ஊடகப் அறிக்கையிலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

அரச பெருந்தோட்ட நிறுவனம், எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் பெருந்தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த முற்பணம் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முந்தைய வருடங்களில் 10000 ரூபாவாக வழங்கப்பட்ட பண்டிகை முற்பணம் தற்போது 20000 ரூபாவாக வழங்கப்படவுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, தொழிலாளர்களின் கொள்வனவுக்கான வாய்ப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு இந்த முற்பணம் அதிகரிப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல், வனஜீவராசிகள், வனவள, பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு வசதி அமைச்சின் செயலாளர் பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியினால் வாழ்க்கை செலவு மற்றும் தொழிலாளர்களின் கொள்வனவு



செய்யும் சக்தி குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையினை கவனத்திற கொண்டே, இந்த விசேட பண்டிகைக்கால கொடுப்பினை வழங்குவதற்கு தீர்மானித்ததாக அவர் கூறியுள்ளார். ஆனாலும் மக்களுக்கான பிரச்சினைகள் இதனால் தீர்ந்து விடுமா என்று கேட்டால் அது கேள்வி குறிதான்.

எமது அன்றாட தேவைகளான கோதுமை மாவு பருப்புக்கும் என்னைக்கும் என்று ஆக குறைந்த அளவு தேவைகளை நிறைவேற்றுவதற்கு திண்டாடிக் கொண்டிருக்கிறோம் இந்த விகிதத்தில் பார்த்தால் தீபாவளி பண்டிகைக்கு ஒரு புது துணியோ ஒரு நல்ல உணவையோ சாதாரணமாக எங்களால் எடுத்துக் கொள்ள முடியாது இருக்கின்றது.

தீபாவளிக்கு சென்று நாங்கள் செலவு செய்கின்ற ஒவ்வொரு ரூபாயும் அடுத்து வரும் நாட்களில் எங்கள் தலைகளில் கடனை சுமத்தும் ஓர் பாரமாகவே அமையப் போகின்றது இது இந்த வருட மாத்திரம் அல்ல எப்போதும் எங்களுக்கு இந்த நிலைமைதான் இருக்கின்றது இந்த நிலையை யார் மாற்றுவார்கள் என்றும் உங்களுக்கு தெரியவில்லை

தோட்டத்தில் பணிபுரியும் ஒரு அம்மாவிடம் தீபாவளி பற்றி பேசிய போது.

எங்களுடைய வீடு மழை வந்தால் தண்ணீர் தாங்க மாறிவிடும்போது ஆனாலும் நீங்க தீபாவளிக்கு மழை வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன் எனது குழந்தைகளுக்கு புத்தாண்டுகளை எடுத்துக் கொடுக்க என்னால் முடியவில்லை. அவர்களுக்கு பட்டாசையோ நல்ல உணவையோ வாங்கிக் கொடுக்கலாம் என்று என்னால் நம்பிக்கையாக சொல்ல முடியவில்லை. நல்ல மழை வந்தது என்றால் அவர்கள் மிச்சம் குழந்தைகளை பார்த்து ஏங்காமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று வேதனையோடு கூறினார்.

உண்மையா உண்மையில்லயத்தில் பெண்கள் படும் பாடு சொல்லி முடியாதது அவர்கள் குடும்பத்தையும் சமாளித்து வேலை தளங்களையும் சமாளித்து குழந்தைகளுக்கான தேவைகளை யும் அதற்கிடையில் வரும் கொண்டாட்டங் களையும் எப்படி சமாளிப்பது என்று தடுமாறிபோகின்றனர்.

ஆனால் நகரப்புறங்களில் கூட்டம் அலைமோதிக்கொண்டு தான் இருக்கிறது என்னதான் பொருளாதாரக் கடி வந்தாலும் இன்னும் தீபாவளி பட்டாசு சத்தங்கள் எங்கள் ஏழைக் குழந்தைகளின் காதுகளை நிறைத்துக் கொண்டுதான் இருக்கின்றன எங்காவது தூரப் போய்விட வேண்டும் என்று எண்ணங்களும் எப்போது எங்களுடைய வாழ்க்கை மாறிவிடாது என்று இயக்கங்களும் மாத்திரம் தான் எங்களுக்கு நிரந்தரமாக இருக்கிறது என்று துயரத்தோடு சிரிக்கும் அவர்களைத் தாண்டி எதையும் பேச முடியாத நிர்ப்பந்தமான நிலையில் இருக்கிறோம்.

இந்த நிலையில் தீபாவளி வியாபாரங்கள் சூடுபிடிக்க தொடங்கி இருக்கிறது அங்கே கூட்டம் அலைமோதுகிறது இந்த கடைக ளில் இந்த பொருட்கள் விற்பனை யாகிக் கொண்டிருக்கிறது என்கின்ற விளம்பரங்களும் இல்லாமல் இல்லை ஆனால் எங்கோ ஒரு மூலையில் யாரோ ஒருவ ருக்கு கிடைக்க வேண்டிய எல்லா சுகங்க ளும் அநீதியாக பறிக்கப்பட்டு ஒரு சமூகம் மிகவும் வறுமைக்கு உள்ளாக தள்ளப்பட்டு கொண்டிருக்கும் போது நாங்கள் தீபாவளியை எப்படி கொண்டாட போகிறோம்?

நாங்கள் எப்போதாவது உழைக்கும் சமூகத்தின் குரல் ஆக இருக்க வேண்டும் என்றால் இப்படியான சில தினங்களையாவது அதற்காக ஒதுக்கலாம்.

தீபாவளிக்கு தீர்வு வரும் என்பது போல அந்த நாட்களில் மாத்திரம் வாக்குறுதிகளை விசிறிவிட்டு வாக்குகளை சேகரித்த பிற்பாடு ஜனத்தை திரும்பி பார்க்காத மந்தைக் கூட்டத்தில் முன்னாள் நாங்களும் தலையாட்டி பொம்மைகளாக தான் மாறிக் கொண்டிருக்கிறோம்.. திருப்பி கேள்வி கேட்கத் தெரியாத எங்களுக்கு பசி தெரியாதவர்கள் உணவற்றவர்களின் வலியை புரிந்து கொள்ளவும் முடியாது. பொருளாதார நெருக்கடி பற்றி பேசி சிலாகித்துக் கொள்ளவும் பொழுது போக்காக மலையகம் பற்றியும் அவர்களது வாழ்வியல் பற்றியும் கவிதைகளை புனையவும் மாத்திரமே எங்களால் முடிந்திருக்கிறது இதுவரைக்கும் நாம் உழைக்கும் மக்களின் குரலாக இருந்திருக்கிறோமா இனியாவது இருப்போமா?

# 5 லட்சத்திற்கு மேல் பணப்பரிவர்த்தனை? வரிச்சுமை அதிகரிக்கும்!

**இனிவரும் காலத்தில் கொடுக்கல் வாங்கல்களினை செய்யும் பொழுது மிகவும் அவதானமாக இருப்பதுடன் அதற்குரிய பற்றுச்சீட்டினை உரிய முறையில் பேணிவருவதுடன் முறையாக கணக்கினை தயாரிப்படுத்தி, பட்டயக்கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அவற்றினை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு உரிய ஆவணங்களுடன் உரிய காலத்திற்குள் சமர்ப்பித்து அவற்றிற்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தினையும் செலுத்துதல் அவசியமாகும். குறிப்பாக பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினை கவனத்தில் கொள்ள வேண்டும்.**



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

**Restriction for Cash Transactions - Tax implications -**




இலங்கை அரசாங்கம் சட்டத்துக்கு முரணான பரிவர்த்தனைகளைக் குறைத்து நாட்டின் நிதி முறைமையை வலுப்படுத்தும் நோக்கில் ரொக்கப்பண பரிவர்த்தனைகளுக்கான புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கட்டுரை இந்த விதிமுறைகள் குறித்த விரிவான தகவல்களை வழங்குகின்றது.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல், வேறு ஒருவருக்கு 500,000 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை ரொக்கமாக செலுத்தினால், அந்த செலவை உங்கள் வரிக்குரிய வருமானத்தில் இருந்து கழிக்க முடியாது. இது பொருட்கள், சேவைகள் அல்லது சொத்துக்களுக்காக செய்யப்படும் அனைத்து ரொக்க பணப் பரிவர்த்தனைகளுக்கும் பொருந்தும்.

இலங்கையில் புதிய ரொக்க பண பரிவர்த்தனை கட்டுப்பாடுகள் நாட்டின் நிதி முறைமையை வலுப்படுத்த ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். இந்த விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், வரி ஏய்ப்புத் தவிர்க்கப்படுவதோடு, பண மோசடி போன்ற குற்றச் செயல்களையும் தடுக்க முடியும். வியாபார நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இந்த விதிமுறைகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப திட்டமிட்டு, வங்கி பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும்.

இந்த விதிமுறையின் நோக்கம் இலங்கையின் "கள்ளச் சந்தை" பொருளாதாரத்தை குறைப்பதாகும். பெரிய ரொக்க பணப் பரிவர்த்தனைகளைச் செய்வதை கடினமாக்குவதன் மூலம், மக்கள் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்று அரசு எதிர்பார்க்கின்றது. இது பண மோசடி மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு உதவும்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி அபிவிருத்தியினை நோக்கிய பயணத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் பல புதிய கொள்கைகள் முன்வைக்கப்பட்டு வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் "காசாக (ரொக்கமாக) மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களினை கட்டுப்படுத்துவதற்காக" புதிய நடைமுறை உருவாக்கப்பட்டது.

அந்த வகையில்,

நபரொருவர் 2023, ஏப்ரல் 1 ஆம் திகதியன்று, அல்லது அதன் பின்னர், கூட்டு மொத்தத்தில் 500,000 ரூபா தொகையினதான அல்லது அதற்கு மேற்பட்ட பணத்தொகையொன்றை, ஒரு நாளில், அல்லது "தனியொரு கொடுக்கல்வாங்கல்" தொடர்பில், அல்லது ஒரு நிகழ்ச்சி தொடர்பான தொடர்ச்சியான தனியொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஒரு வங்கிக் கணக்கினூடாகப் பணம் பெறுனரின் கணக்குக்கான காசோலையொன்று, அல்லது பணம்பெறுநரின் கணக்குக்கான வங்கிவரைவொன்று, அல்லது கடன்அட்டை, பற்று அட்டை அல்லது இலத்திரனியற் கொடுப்பனவு முறை என்ற வகையில், அல்லாத வேறு வகையில் அல்லது வேறு முறைமையின் பாவனையின் மூலம் ஏனைய நபரொருவருக்கு செலுத்துமிடத்து புதிய கட்டுப்பாடு வருகின்றது. "தனியொரு கொடுக்கல் வாங்கல்" என்பது, தனியொரு விலைப்பட்டியின்மீது, பெறுகையின்மீது அல்லது கூற்றின்மீது, எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவு அல்லது பெருகை என்று பொருளாகும்."

**இந்த கட்டுப்பாடு இரண்டு வகையில் அமைகின்றது. அவையாவன,**

• வரிவருமானத்தினை கணக்கிடுவதில் அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பிலான ஏதேனும் கழிப்பனவு அனுமதிக்கப்படமாட்டாது.

• சொத்தொன்றினை கொள்வனவு செய்யும் பொழுது மேற்கூறிய முறைமை தவிர்ந்த வேறுவகையில் செய்யும் இடத்து அந்த தொகையானது சொத்தொன்றின் ஆகுசெலவாக கருதப்படமாட்டாது.

### புதிய விதிமுறைகள் என்ன?

• ஏப்ரல் 1, 2023 முதல், ஒரு நபர் மற்றொரு நபருக்கு ரொக்கமாக 5 லட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைச் செலுத்தினால், அந்தத் தொகையை அவரது வரிக்குரிய வருமானத்தில் இருந்து கழிக்க முடியாது.

• இது வியாபார பண்டங்கள் மற்றும் பொருட்கள், சேவைகள் அல்லது சொத்துக்கள் வாங்குவதற்காக செய்யப்படும் அனைத்து ரொக்க பண பரிவர்த்தனைகளுக்கும் பொருந்தும்.

### விதிமுறைகளின் நோக்கம் என்ன?

• இலங்கையில் கள்ளப்பண பரிவர்த்தனைகள் பரவலாக இருந்து வருகின்றன. இதன் காரணமாக அரசுக்கு உரிய வரி வருவாய் கிடைப்பதில்லை.

• மேலும், இது பண மோசடி மற்றும் பிற குற்றச் செயல்களுக்கு வழிவகுக்கின்றது.

• புதிய விதிமுறைகள் மூலம், பெரிய தொகையை ரொக்கமாகச் செலுத்துவதை அரசு கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது.

• இதன் மூலம், மக்கள் வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் மூலம் பண பரிவர்த்தனைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள்.

• இதன் விளைவாக, பண பரிவர்த்தனைகள் வெளிப்படையாக நடைபெற்று, அரசாங்கத்திற்கு உரிய வரி வருவாய் கிடைக்கும்.

• மேலும், பண மோசடி போன்ற குற்றச் செயல்களைக் கண்காணிப்பதும் எளிதாகும்.

### விதிமுறைகள் யாருக்குப் பொருந்தும்?

• புதிய விதிமுறைகள் அனைத்து வகையான தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

• ஒரு தனிநபர் தனது சொந்த பணத்தைக் கொண்டு கூட ரொக்கமாக 5 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைச் செலுத்தினாலும், அந்தச் செலவை வரி கணக்கு காட்ட முடியாது.



விதிவிலக்குகள் உள்ளனவா? புதிய விதிமுறைகளில் சில விதிவிலக்குகள் உள்ளன. அவையாவதுன:

• அரசுத் துறைகளுக்கான பணம் செலுத்துதல்: அரசுத் துறைகளுக்கான ரொக்க பண பரிவர்த்தனைகளுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

• வங்கி பரிவர்த்தனைகள்: காசோலை, வங்கி பரிமாற்றம், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு அல்லது மின்னணு பரிமாற்றம் மூலம் செய்யப்படும் பண பரிவர்த்தனைகளுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

• குறிப்பிட்ட தொகைக்கு கீழ் இருக்கும் பரிவர்த்தனைகள்: 5 லட்சம் ரூபாய்க்கும் குறைவான ரொக்க பரிவர்த்தனைகளுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

### விதிமுறைகளை மீறினால் என்ன விளைவுகள்? (வரி தண்டனை):

• புதிய விதிமுறைகளை மீறி 5 லட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை ரொக்கமாகச் செலுத்தினால், அத்தகைய செலவு வரி கணக்கு காட்டப்படாது.

• இதன் விளைவாக, உங்கள் வரி வருமானம் அதிகரித்து, அதிக வரி செலுத்த வேண்டியிருக்கும். மேலும், வரித்துறை அபராதம் விதிக்கவும் வாய்ப்புள்ளது.

### பிற சாத்தியமான விளைவுகள்:

புதிய விதிமுறைகளை மீறினால், பின்வரும் சாத்தியங்கள் உள்ளன:

• வரித்துறையினர் உங்கள் வரி கணக்குகளை கணக்கீடு செய்யலாம்.

• உங்கள் வணிக நடவடிக்கைகள் கேள்விக்குள்ளாக்கப்படலாம்.

• பண மோசடி போன்ற குற்றச்சாட்டுகள் எழ வாய்ப்புள்ளது.

### வியாபார நிறுவனங்களுக்கான தாக்கம்:

• புதிய விதிமுறைகள் வியாபார நிறுவனங்களையும் பாதிக்கும். பெரிய அளவிலான ரொக்க பரிவர்த்தனைகளைச் செய்யும் நிறுவனங்கள், மாற்று வழிகளைத் தேட வேண்டியிருக்கும்.

• இதனால், வங்கி பரிவர்த்தனைகளுக்கான பரிமாற்றக் கட்டணங்கள் அதிகரிக்கக்கூடும்.

• மேலும், நிறுவனங்கள் தங்களது பணப்புழக்கத்தை கண்காணிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

### எதிர்காலத்திற்கான திட்டங்கள்?

• இலங்கை அரசாங்கம் எதிர்காலத்தில் ரொக்க பரிவர்த்தனை வரம்பை மேலும் குறைக்க திட்டமிட்டுள்ளது.

• இதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்தை மேலும் டிஜிட்டல் மயமாக்குவதற்கும் கள்ளப்பண பரிவர்த்தனைகளைக் குறைப்பதற்கும் முயற்சிக்கின்றது.

இந்த புதிய நடைமுறையின் உண்மையான நோக்கத்தினை நாம் அவதானிக்கும் பொழுது இலங்கையில் காணப்படுகின்ற "கருப்பு சந்தை" முறைமையை படிப்படியாக கட்டுப்படுத்தி அவற்றினை இயலுமானவரையில் இல்லாதொழிப்பதனை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

எனவே இனிவரும் காலத்தில் கொடுக்கல் வாங்கல்களினை செய்யும் பொழுது மிகவும் அவதானமாக இருப்பதுடன் அதற்குரிய பற்றுச்சீட்டினை உரிய முறையில் பேணிவருவதுடன் முறையாக கணக்கினை தயார்படுத்தி, பட்டயக்கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அவற்றினை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு உரிய ஆவணங்களுடன் உரிய காலத்திற்குள் சமர்ப்பித்து அவற்றிற்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தினையும் செலுத்துதல் அவசியமாகும். குறிப்பாக பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

• நாளாந்த வியாபார கொடுக்கல் வாங்கல்கள்.

• வியாபாரத்திற்கு தேவையான அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் கொள்வனவு மற்றும் திருத்துதல் பழுதுபார்த்தல் போன்ற மூலதன செலவுகள்.

• தனிப்பட்ட தேவைக்காக அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் கொள்வனவு செய்யும்பொழுது. உதாரணம், வாகனம், நகைகள்.

• திருமணவிழா மற்றும் ஏனைய விழாக்களுக்கான செலவுகள்.

• அரங்கேற்ற செலவுகள் குறிப்பாக நடன அரங்கேற்ற செலவுகள்.

• மருத்துவ செலவுகள், பிரயாண செலவுகள் மற்றும் கல்வி செலவுகள்.

நாட்டில் நடைபெறுகின்ற முழுமையான கொடுக்கல் வாங்கல்களினை இனங்கா ணுவதன் வாயிலாக மொத்த உள்நாட்டு உற்பத்தி, வருமானம் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றின் உண்மையான புள்ளி விவரங்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் வாயிலாக அரசாங்கத்தினால் தற்பொழுது அறிமுகப்படுத்தியுள்ள புதிய வரிக் கொள்கைகளின் வாயிலாக சிறந்த வரி வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையை ஏற்படும்.

கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் உண்மையான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தரவுகளை பெற்றுக் கொள்ள முடியாததின் காரணத்தினால் அரசாங்கத்திற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பல வகையான வருமானங்கள், குறிப்பாக நேரடி மற்றும் மறைமுக வரி வாயிலாக பெறவேண்டிய பெருந்தொகையான வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியாமையினை காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக இன்று வரை வரிகட்டாது தப்பித்துக் கொண்டிருக்கும் வரி ஏய்ப்பவர்கள் (Tax Evaders) இனி வருங்காலத்தில் மிகவும் இலகுவாக இனங்காணக்கூடிய முறைமையேற்பட்டு புதிய வரி செலுத்துனர்கள் உள்வாங்கப்பட உள்ளார்கள்.

மேலும் சொத்திற்கான உண்மையான பெறுமதி பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை ஏற்படப்போகின்ற காரணத்தினால், அரசாங்கத்தினால் வருங்காலத்தில் அமுல்படுத்தவுள்ள "கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி" (Imputed Rental Income Tax - IRIT), "சொத்து வரி" (றுநயடவா வுயஓ) வாயிலாக மேலதிக வருமானத்தினையும் மற்றும் சிறந்த பெறுபேறுகளினையும் ஈட்டிக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். எனவே இனிவரும் காலத்திற்கு அரசாங்கத்தினால் மிகவும் இலகுவான முறையில் தரவுகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதன் வாயிலாக சிறந்த வருமானத்தை ஈட்டிக் கொள்ளக்கூடிய பொறிமுறை உருவாக உள்ளது. அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட கடுமையான பல இலக்குகளினை அடையக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்படப் போகின்றது.

ஏற்கனவே பாரிய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு வாயிலாக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட இந்த புதிய நடைமுறையின் மூலம் மேலும் பல வகையில் அவதானமாக இருக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லையென்றால் மேலும் கஷ்டப்படவேண்டிய நிலையேற்படும். அதாவது பெரும்பாலான கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்திற்குள் உள் வாங்கப்படுவதனால் உண்மையான வருமான தரவுகளை சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படப் போகின்றது. அதன் வாயிலாக உண்மையான வருமானத்தினை சமர்ப்பிக்காதவர்கள் மேலதிகமாக வரியினை செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். அது மாத்திரமன்றி கடந்த காலங்களில் அவ்வாறு முறையான வருமானம் மற்றும் சொத்து நிலவரத்தை சமர்ப்பிக்க தவறியமைக்கான தண்டப்பணம் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படப் போகின்றது.

என்னதான் புதிய புதிய சட்டங்கள் காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்டாலும், அந்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்டு சிறந்த மாற்று சட்டங்களை உருவாக்குவதன் வாயிலாகவே அரசாங்கம் நிர்ணயித்த இலக்கினை அடையக்கூடியதாக இருக்கும். எனவே அரசாங்கம் இந்த புதிய நடைமுறைமையினை தொடர்ச்சியாக (Constancy) அமுல்படுத்துவது மிகவும் முக்கியமாக கருதப்படுகின்றது. கடந்த காலத்தை அவதானிக்குமிடத்து அரசியல் நோக்கங்களுக்காக பல வரி நிவாரணங்கள் வழங்கப்படுவதன் வாயிலாக மக்கள் மத்தியில் இவ்வாறான புதிய கொள்கைகளை மக்கள் மதிக்காத தன்மை காணப்பட்டு வருவது ஒரு கசப்பான உண்மையாகும்.

ஆனாலும் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். ஏனென்றால் கீழ்க்கண்டவாறு இந்த புதிய முறைமையை அரசாங்கத்தினால் கடுமையாக மாற்றி அமைக்க முடியும்.

• 500,000 ரூபா தொகையினதான அல்லது அதற்கு மேற்பட்ட பணத்தொகையினை குறைக்கக்கூடிய சாத்தியகூறு. உதாரணமாக 50,000 ரூபாவாக குறைக்கலாம்.

• முழுமையாக மாற்றி அமைத்து கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் பணமாக செலுத்த முடியாது என்ற கட்டுப்பாடு கொண்டுவரப்படலாம்.

• சட்டத்தை மீறுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை மற்றும் தண்டப்பணம் அறவிடப்படுதல் போன்றன.

வரி ஆலோசகர் என்ற ரீதியில் நோக்குமெடுத்து இந்த புதிய முறைமை இலங்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமில்லை. ஆனால் பொதுமக்களுக்கு கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடு அரச செலவினங்களுக்கும் சில நிறுவனங்களுக்கும் இல்லாமல் காணப்படுவது பாரிய குறைபாடாக நான் கருதுகிறேன். இவ்வாறான சட்டத்தில் காணப்படுகின்ற ஓட்டைகளின் வாயிலாக அந்த சட்டத்தினால் மற்றும் நடைமுறையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த பெறுபேறுகளினை பெற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் மக்கள் மத்தியில் தாங்கள் மாத்திரம் சட்டத்தை ஏன் பின்பற்ற வேண்டும் என்ற கேள்வியும் எழுகின்றது.

அதற்கான காரணம் என்னவென்றால் மேற்கூறிய புதிய முறைமையில் பின்வருவனவற்றுக்கு விதிவிலக்களிக்கப் பட்டு ஏற்புடையதில்லையென அமுலாக்கப் பட்டுள்ளது. அவையானவன,

• இலங்கை அரசாங்கத்தினாலான அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினாலான ஏதேனும் கொடுப்பனவுகளுக்கு.

• ஒரு வங்கியினாலான அல்லது நிதிநிறுவனத்தினாலான ஏதேனும் கொடுப்பனவுகளுக்கு.

• அமைச்சரினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய வகுப்பினரான ஆட்களுக்கு அல்லது கொடுப்பனவுகளுக்கு.

இலங்கையின் பாரிய பொருளாதார சீரழிவிற்கு காரணமாக இனம் காணப்பட்ட விடயமே லஞ்சம், ஊழல் மற்றும் அதனுடன் தொடர்புடைய முறைகேடான செயற்பாடுகளாகும். அத்துடன் அரசாங்கத்தினால் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட பாரிய தேவையற்ற ஆடம்பர செலவினங்களும் திறனற்ற அபிவிருத்தி செயல் திட்டங்களும் மிக முக்கியமாக இனங்காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேற்கூறிய விதிவிலக்குகளின் காரணமாக மேலும் பாரிய முறைகேடுகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனவே சட்டத்தினை உருவாக்கும் பொழுது இவ்வாறான குறைபாடுகளை நீக்கி, சிறந்த கட்டுக்கோப்பான முறைமையினை உள்வாங்குவதன் வாயிலாக இந்த புதிய நடைமுறையின் வாயிலாக நாடும் மக்களும் சிறந்த பெறுபேறுகளினை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் வருங்காலத்தில் ஏற்படும்.

# தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

ஆதிரா

**ஒரு தொழில் தொடங்குவதற்கு முன்பும் சரி பின்பும் சரி பெண்கள் சந்திக்க இருக்கும் பிரச்சனைகள் ஆயிரம். அவள் மிகவும் கஷ்டப்பட்டு பள்ளிக்கு சென்று, கல்லூரி படிப்பை முடித்து, பின் ஒரு நிறுவனத்திற்கோ அல்லது அவள் நினைத்தவாறு தொழில் செய்வதற்கோ முயற்சிக்கும்பொழுது இச்சமூகம் ஒத்துழைக்க வேண்டும். இவை அனைத்தையும் மீறி சாதிக்கும் பெண்களை மனதில் கொண்டு, சாதனையாளர்களாக ஒளிருங்கள்!**

ஒரு பெண்ணின் படிப்பில் தொடங்கி அவள் கல்யாணம் வரை எல்லாமே குடும்பத்தினராலும் சமூகத்தாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதையும் மீறி அவளுக்கென ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்துவதற்கு சுய தொழிலில் ஒரு பாலமாக அமைகிறது. அதில் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளோ ஏராளம்.

தொழில் தொடங்குவது என்பதே ஒரு சவாலான விஷயமாகும். அதிலும் பெண்கள் தொழில் தொடங்குகிறார்கள் என்றால் அவர்கள் சமாளிக்கும் பிரச்சனைகள் ஏராளம். இவை அனைத்தையும் தாண்டி அவர்களுக்கென ஒரு அங்கீகாரத்தை அனைத்து துறைகளிலும் பெண்கள் கால் தடம் பதித்து வருகின்றனர்.



பல Scheme மற்றும் நடவடிக்கைகள் பெண்களின் முன்னேற்றத்திற்காக இருந்தாலும்ன் இலங்கையில் தொழில் முனைவோர் சூழலில் ஆண்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். பெண்களுக்கான தொழிலில் குறைந்த வருவாயும், ஆண்களுக்கான துறைகளில் அதிக வருவாயும் ஈட்டுவதாக இருக்கிறது. பழங்காலத்தில் இருந்தே "Women Friendly Sectors" என சில துறைகளை இச்சமூகம் பெண்களுக்கென ஒதுக்கியுள்ளது. அவைகளில் கல்வித்துறை ஆடை மற்றும் அழகு பராமரிப்புத் துறையில் தான் பெண்கள் தொழில் முனைய வேண்டும் எனும் அவநம்பிக்கையும் வலம் வந்து கொண்டிருக்கிறது. இதுவே அவர்களின் அனுபவம் மற்றும் திறன்களை வெளிக்காட்ட தடுக்கிறது.

பெரும்பாலான பெண்கள் தொழில் முனையும் போதும் சரி வேலைக்கு செல்லும் போதும் சரி அவர்களின் குடும்ப ஆதரவு என்பது மிகவும் முக்கிய பங்காக இருக்கும். ஒரு ஆணுக்கு குடும்பத்தில் கிடைக்கும் ஆதரவு எந்த பெண்ணுக்கும் தொழில் ரீதியாக அவள் குடும்பத்தில் கிடைப்பதில்லை. பெண் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் முக்கிய சவாலை அவர்கள் குடும்பத்தை சமாளிப்பது தான்ல் இலங்கையில் குடும்ப கட்டமைப்பு என்பது ஒரு பெண்ணை முன்வைத்து கட்டப்பட்டுள்ளது. ஒரு குடும்பம் என எடுத்துக் கொண்டால் அதில் ஆண்களுக்கென்று ஒரு வேலை பெண்களுக்கு என்று ஒரு வேலை என தனித்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிலை மெதுவாக மாறிக்கொண்டே வருகிறது. சில குடும்பத்தில் பெண்கள் வேலைக்கு செல்லும் சமயத்தில் ஆண்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். ஒரு பெண் வீட்டை விட்டு வெளியே வந்து தொழில் முனையவோ அல்லது ஒரு நிறுவனத்திற்கு பணிக்கு செல்வதோ மிகவும் சவாலாக இருப்பது எப்பொழுது மாறுகிறதோ அப்பொழுது என் சமூகத்தில் சிறந்த முன்னேற்றம் நிகழும்.

பல நூற்றாண்டுகளாக பெண்களுக்கு சகித்துக் கொள்ள கற்றுத் தரப்படுகிறது. இந்த ஆணாதிக்க சமூகம் இதேபோன்று அனுசரித்து செல்லும் பெண்களை போற்றி, பெண் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று பெண்களுக்கான வரையறையை நிர்ணயிக்கிறது. இன்னும் நாம் எத்தனை காலங்களுக்கு இதுபோன்ற நடந்து கொள்ள போகிறோம்? இன்னும் எத்தனை விஷயங்களை நாம் மற்றவர்களுக்காக அனுசரித்து தியாகம் செய்யப் போகிறோம்?



பல பெண்கள் தற்போது வேலைக்கு செல்கின்றனர். இருப்பினும் அவர்கள் பணரீதியாக சுதந்திரமாக இருக்கிறார்களா? என்பது இன்னும் கேள்விக்குறியாக இருக்கிறது. உண்மையான பண ரீதியான சுதந்திரம் என்பது வேலைக்கு செல்வது மட்டுமல்ல. நாம் பணத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என்பதை முடிவெடுப்பது தான் சுதந்திரமாகும்.

இன்று பல பெண்கள் படித்திருக்கின்றனர். இருப்பினும் அவர்களால் ஒரு வேலையை வெற்றிகரமாக தொடர முடிகிறதா? அனைவருக்கும் கனவுகள், ஆசைகள் மற்றும் வேலைக்கான இலக்குகள் இருக்கும். அதை மிகவும் முக்கியமாக கருதுவோம்.

இதற்கான முக்கிய காரணமாக திருமணம் இருக்கிறது. திருமணத்திற்கு பிறகு பெண்கள் கணவன் இருக்கும் இடத்திற்கு செல்ல வேண்டும் என்றும் குழந்தைகளை அவர்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நிறைய விதிமுறைகள் இருக்கிறது. இதனால் வேலையில் வெற்றிகரமாக இருக்கும் பெண்களும் வேலையை விட்டு இந்த அணாதிக்க விதிமுறைகளை பின்பற்ற தொடங்கி விடுகின்றனர். இன்னும் எத்தனை காலங்களுக்கு நாம் நமது கனவுகளையும், வேலைகளையும் இழக்க போகிறோம்.

ஒரு தொழில் தொடங்குவதற்கு முன்பும் சரி பின்பும் சரி பெண்கள் சந்திக்க இருக்கும் பிரச்சனைகள் ஆயிரம். அவள் மிகவும் கஷ்டப்பட்டு பள்ளிக்கு சென்று, கல்லூரி படிப்பை முடித்து, பின் ஒரு நிறுவனத்திற்கோ அல்லது அவள் நினைத்தவாறு தொழில் செய்வதற்கோ முயற்சிக்கும்பொழுது இச்சமூகம் ஒத்துழைக்க வேண்டும். இவை அனைத்தையும் மீறி சாதிக்கும் பெண்களை மனதில் கொண்டு, சாதனையாளர்களாக ஒளிருங்கள்!

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

0777 43 55 57

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2024இல் வெளியிடப்பெற்றது.